www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
16-28 பிப்ரவரி '91    6/7    விலை ரூ.2.00



அரசியல் சீக்கு ஆட்சியைக் கவிழ்த்தது!

# விலைவாசி உயர்வுக்கு வளைகுடாப் போர் காரணமா?




படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




● 1 - 15 ஜனவரி '91 'புதிய ஜனநாயகம்' படித்தேன். அதில் 'கூட்டுக் கொள்ளைக்குக் கூட்டுறவு சங்கங்கள்' என்ற செய்திக் கட்டுரை, கிராமத்தில் உள்ள கூட்டுறவு சங்க தலைவர்களுக்கு ஒரு சவுக்கடியாய் அமைகிறது. தொடர்ந்து கூட்டுறவு சங்கங்களின் அக்கிரமங்களை வெளியிடவும். பின் அட்டையில் உள்ள 'இதுதான் இன்றைய இந்தியா'வும் அருமை.

வாசகர் புதுக்கோட்டை

● தூங்கிக் கிடக்கும் இளைய ரத்தத்தை சமூக நீதிக்காக கொதித்தெழச் செய்யும் பத்திரிகையே புதிய ஜனநாயகம்.

ஹனீபா மதுரை-1

● புதிய ஜனநாயக இதழின் முதல் பக்க அட்டைப்படம் ஏறத்தாழ ஒரே வண்ணத்தில் ஒன்றுபோல இருப்பதால் வாசகர்களுக்கு புதிய இதழ் வந்து விட்டதா என்று எளிதில் அறிய முடிவதில்லை. வண்ணங்களை மாற்றி அச்சிடவும்.

எஸ்.கதிரவன் வேலூர்.

● இதழ் எண் 6/5ல் வளைகுடா போர் பற்றிய தலையங்கக் கட்டுரை நன்றாக இருந்தது. முழக்கம் இடம் பெற்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். கேள்வி - பதில் பகுதியில் குறிப்பாக சமஸ்கிருதத்தை ஏன் தேசிய மொழிப் பட்டியலிலிருந்து நீக்க வேண்டும் என்ற கேள்விக்குப் பதில் அருமை. மேலும் சாலையார் மதிப்பீடு பற்றிய விளக்கம், சிவந்த கண்கள் கவனிக்கட்டும் என்ற பகுதியில் வெளிவந்தவை முதலியவையும் சிறப்பாக இருந்தது.

கே.சரவணன் திருவரம்பூர்

● நடுப்பக்கத்தில் வெளிவரும் செய்திகள் - படக் கட்டுரை பு.ஜ.வை வாங்கிய உடனே நடுப்பக்கத்தை படிக்கும்படி தூண்டுகிறது தொடர்ந்து கடைபிடியுங்கள்.

சு.வாசுதேவன் திருச்சி

● சென்ற 6/4 இதழில் 'வானளாவிய அதிகாரத்தின் விளைவு' கட்டுரை மிகவும் சிறப்பு. ஓட்டுப் பொறுக்கிகளின் முகத்திரையைக் கிழித்தும், ஆளுனர்களுக்குரிய ஆட்சியதிகாரங்கள் மற்றும் அவர்கள் எப்படி பாசிச நாய்களுக்கு சேவை நாய்களாக உள்ளார்கள் என்பதை எடுத்துக்காட்டியும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. மேலும் புதுவையில் சென்ற தேர்தலின்போது நடந்த நர்ஸ் கற்பழித்து கொலை, கத்திக் குத்துச் சம்பவம், சாதிக்கலவரம் போன்றவற்றையும் எழுதியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

டி.பாலு மஞ்சக்குப்பம்-கடலூர்

● 1-15 ஜன '91 இதழில் வெளிவந்த 'இதுதான் இன்றைய இந்தியா' பகுதி சிறப்பாக இருந்தது. ஆளும் வர்க்கத்து - மேட்டுக்குடிப் பிள்ளைகளின் கல்விநிலையும் சாதாரண உழைப்பாளி பிள்ளைகளின் கல்வி நிலையும் பற்றி வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. விவசாய கூலித் தொழிலாளிகளின் பிள்ளைகள் பெரும்பான்மையோர் மாடு மேய்க்கவும், வீட்டு எடுபிடி வேலைக்கும், சாணி அள்ளவும்... என வேலைகளில் ஈடுபடுகிறார்கள். இவர்களுக்கான சலுகையோ மாற்று வழியோ ஒருதுளியும் இல்லை.

ஈ.எம்.செல்வராஜி, திருவெண்ணைநல்லூர்

# அப்பாவிகளை மிரட்டும் குற்றவாளிகள்

திண்டிவனம் - உளுந்தூர் பேட்டை பகுதிகளில் கிரானைட்ஸ் குவாரியில் கற்களை வெட்டியெடுக்கிறார்கள். 'அஸ்வினி எண்டர்பிரைசஸ்' 'பல்லவா கிரானைட்ஸ்' 'சோழா கிரானைட்ஸ்' போன்ற பல கம்பெனிகள் இதை செய்துவருகின்றன. அரசு உரிமம் பெற்றுள்ள இக்கம்பெனிகளுக்குத் தேவையான ஜெலட்டின், எலெக்டரிக் டெட்டனேட்டர் போன்ற வெடிமருந்துகளை அரசே விநியோகிக்கிறது. போலீசுக்கும் அதிகாரிகளுக்கும் இந்த கம்பெனி முதலாளிகள் லஞ்சம் கொடுத்து அளவுக்கு மீறி வெடிமருந்துகளை வாங்குகிறார்கள். சட்ட விரோதமாக குடிசைகள், குடியிருப்பு பகுதிகளில் வெடி மருந்து பொருட்களை சேமித்து வைப்பதால் விபத்துகள் நடக்கின்றன.

கடந்த ஆண்டு ஜூலை 2ந் தேதி உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் அருகே உள்ள குடிசை ஒன்றில் ஜெலட்டின் குச்சிகள் வெடித்து பல குடிசைகள் சாம்பலாகின. சமீபத்தில் டிசம்பர் 30ந்தேதி திண்டிவனம் ஜெயபுரத்தில் ஜெலட்டின் இருந்த இடம் தீப்பற்றி விபத்து நடந்தது. 4 பேர் இறந்தனர். 10க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் ஒரு கிலோ மீட்டர் சுற்றியுள்ள வீடுகள் சேதமடைந்தன.

விபத்து நடந்த 'அஸ்வினி எண்டர்பிரைசஸ்' கம்பெனியின் உரிமையாளரான சுப்பாரெட்டி வட்டாரத்திலேயே ஒரு பெரிய பணமுதலை. அதிகாரிகள், அரசியல்வாதிகளை கைக்குள் போட்டுக்கொண்டு திமிரோடு வலம் வருபவர். தமக்கு எதிராக எழும் எந்தப் பிரச்சினையையும் போலீசு, எம்.எல்.ஏ., மந்திரி, ரௌடிகள்... இப்படி பக்க பலத்தோடு எளிதாக சமாளித்து தப்பித்துக் கொள்பவர்.

ஜெயபுரம் வெடிவிபத்து நடந்ததும் அக்கம்பெனி ஊழியர்கள் பத்மநாபன், மணவாளனைத்தான் போலீசு கைது செய்ததே தவிர முதலாளி சுப்பாரெட்டியை அல்ல. தனது வக்கீல் எஸ்.ஆர்.ஆர். என்பவர் மூலம் போலீசு பாதுகாப்புடன் வெளிப்படையாகவே கம்பெனியில் இருந்த முக்கிய ஆவணங்களை எல்லாம் எடுத்துச் சென்றார்



சுப்பாரெட்டி! கம்பெனியின் இன்னொரு பங்குதாரரான ரங்கராஜன், இதேபோல் திருட வந்தபொழுது பகுதி மக்கள் பிடித்து போலீசிடம் ஒப்படைத்தனர். போலீசு அவரை பத்திரமாக வீட்டுக்கு அனுப்பி வைத்தது!

பகுதியிலுள்ள மக்களும் சில சமூக நல அமைப்புகளும் இவற்றிற்கு எதிராக போராடவே வேறு வழியில்லாமல் போலீசு, சுப்பாரெட்டி மீது வழக்கு பதிவு செய்தது. சுப்பாரெட்டியை உடன் கைது செய்யாமல் முன் ஜாமீன் எடுத்துக் கொள்ளும்வரை காலம் கடத்தியது. முன்ஜாமீனுடன் போலீசு அதிகாரிகள், எம்.எல்.ஏக்கள் படை சூழ பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார் சுப்பாரெட்டி. நஷ்ட ஈடு கோரி வழக்குப் போடுவதாக இருந்த வீட்டாரையெல்லாம் பார்த்து பகிரங்கமாக மிரட்டினார். வீட்டையும் இடத்தையும் தன்னிடம் விற்றுவிட்டு ஓடிவிடும்படி கூறினார். இறந்துபோன கூர்க்காவின் மூத்தமகள் இவ்வழக்கில் முக்கிய சாட்சியாக இருப்பார் என்பதால் இவரைக் கடத்தி இருக்கிறது சுப்பாரெட்டி கும்பல்.

விபத்து நடந்த அன்று பாதிக்கப்பட்டவர்கள் உரிய சிகிச்சையின்றி தவித்தனர்; திண்டிவனம் அரசு மருத்துவமனை அலட்சியப் படுத்தியதால் வெளியூருக்குச் சென்று பலர் மருத்துவம் பார்த்தனர். முன்னாள் அமைச்சர் பொன்முடி உட்பட பலரும் அதிகாரிகளும் வந்து பார்வையிட்டு ஆறுதல் கூறி நிவாரணம் தருவதாக சவடாலடித்தனரே ஒழிய இன்றுவரை எவ்வித பயனுமில்லை.

— தகவல்: தி.அருள்மணி, கடலூர்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

7

16 - 28 பிப்ரவரி '91

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும்.
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# ஆட்சிக் கலைப்பும் அடுத்த தேர்தல் பேரங்களும்

தமிழகத்தின் அரசியல் சீக்கான ஜெயலலிதாவின் நிர்பந்தத்தால், கருணாநிதி அரசு கவிழ்க்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

எதிர்க்கட்சியின் ஆட்சியைக் கவிழ்ப்பதும், அரசியல் கூட்டுக்கள் - பேரங்கள் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதும் நமது நாட்டில் புதியதல்ல. அதற்காக அடாவடித்தனமான, அக்கிரமமான பல வழிகளை ஓட்டுப் பொறுக்கிகள் மேற்கொள்வதும் புதியதல்ல. ஆனால் அதைச் சாதிப்பதற்காக ராஜீவ் - சந்திரசேகர் - ஜெயலலிதா கூட்டு ஒரு கடைகோடி நிலைக்கே போவது என்ற புதிய வழிமுறைகளையும் உருவாக்கியுள்ளது. இட்டுக்கட்டப்பட்ட காரணங்களை வைத்து, சட்டப்படி கவர்னரது ஒப்புதல் கூட இல்லாமல் தி.மு.க. ஆட்சியை சந்திரசேகர் கும்பல் கவிழ்த்துள்ளது.

''தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு மோசமடைந்துவிட்டது; தேச ஒருமைப்பாட்டுக்கும் ஐக்கியத்துக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் பிரிவினைவாத சக்திகளுக்கு தி.மு.க. அரசு துணையாக நின்றது. தமிழகத்தில் ஈழ விடுதலைப் புலிகளும் அசாம் பிரிவினைவாத அமைப்பான ''உல்ஃபா''வும் கூட்டுச் சேர்ந்து பயிற்சி முகாம்கள் நடத்தின. பஞ்சாப் பயங்கரவாதிகளுக்கும் ஆந்திர நக்சலைட்டுகளுக்கும் புலிகள் ஆயுதங்களை விநியோகிக்கின்றனர். தமிழகத்திலிருந்து பெட்ரோல் - டீசல் போன்றவற்றை புலிகள் ரகசியமாகக் கடத்திச் செல்கின்றனர். இதுபற்றி தி.மு.க. அரசுக்கு எச்சரித்து நடவடிக்கை எடுக்கக் கோரியும் அது செய்யவில்லை'' என்று ஆட்சிக் கவிழ்ப்புக்கான காரணங்களாக குற்றம் சாட்டுகிறது சந்திரசேகர் அரசு. முன்பு, 1976ல் அவசரநிலை ஆட்சிக் காலத்தில் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டபோது, மத்திய துணை ராணுவப் படைகள் குவிக்கப்பட்டதைப் போலவே, இப்போதும் ஜனநாயக - புரட்சிகர இயக்கங்களை வேட்டையாட மத்தியப் படை குவிக்கப்பட்டுள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதானது தமிழக மக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள போர்; மாநில அரசுகளைக் கலைக்கும் 356-வது அரசியல் சட்டம் சர்வாதிகாரமானது - என்று இழந்த சொர்க்கத்தை மீட்க ஒப்பாரி வைக்கிறார் கருணாநிதி. ஆனால் அவர் கடந்த 11 மாதங்களாக ஆட்சியிலிருந்த போது இதுபற்றி மூச்சே விடவில்லை. அதைவிட, மைய அரசுக்கு விசுவாசமாக எம்.ஜி.ஆரைப் போலவே ஈழ விடுதலைக்குத் துரோகமிழைத்து, போராளிகளை ஒடுக்கி, சிறையிலடைத்தார். தன்னுரிமை இயக்கத்தவர்களையும் கம்யூனிசப் புரட்சியாளர்களையும் கைது செய்து தேசத் துரோக குற்றம் சாட்டி சிறையிலடைத்தார். தனது ஆட்சி கவிழ்க்கப்படும் என்று நிச்சயமானபோதும் மத்திய அரசுக்கு முன்னிலும் விசுவாசமாக நடந்து கொண்டார். எம்.ஜி.ஆரைப் போலவே ஒருபுறம் கவர்ச்சி - இலவசத் திட்டங்களையும் மறுபுறம் சாராய போதையிலும் தமிழக மக்களை மூழ்கடித்து அதிகார முறைகேடுகள், லஞ்ச ஊழல், வாரிசு ஆட்சிமுறை முதலானவற்றில் ஊறித் திளைத்தார். இப்படி தமிழினத்துக்கு கருணாநிதி அரசு செய்த துரோகங்களால் அது ஆட்சியில் நீடிக்கவே அருகதையற்றது. ஆனால், அதற்காக, தனது சொந்த ஆதாயங்களுக்காக ராஜீவ் - சந்திரசேகர் கும்பல் தி.மு.க. அரசைக் கவிழ்த்ததை நாம் ஆதரிக்க முடியாது. இதையே காரணம் காட்டி மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முயலும் கருணாநிதிக்குத் துணை போகவும் முடியாது.

இப்போது ஆட்சிக் கவிழ்ப்பு விவகாரம் மக்களின் சிந்தனையிலிருந்து பின்னுக்குத் தள்ளப்பட்டு தேர்தல் கூட்டுக்களும் பேரங்களும் முன்னிலைக்கு வந்துவிட்டன. அந்த அளவுக்கு விரைவாக - ஆட்சியைக் கவிழ்த்த ஒரே வாரத்தில் அ.தி.மு.க.வும் காங்கிரசும் தேர்தல் கூட்டணி கட்டிக் கொண்டு தொகுதிப் பங்கீடுகளை முடிவு செய்துவிட்டன. மாநில ஆட்சியை ஜெயலலிதாவுக்கு விட்டுக் கொடுத்து, நாடாளுமன்றத் தேர்தலின்போது அதிக இடங்களை தனக்குத் தருமாறு காங்கிரசு பேரம் நடத்தி முடித்துள்ளது. அதே வேகத்தோடு தி.மு.க. மற்றும் போலிக் கம்யூனிஸ்டு கூட்டணி தொகுதிப் பங்கீடு - பேரங்களை நடத்துகிறது. திருநாவுக்கரசு கோஷ்டி மீண்டும் ஜெயலலிதாவுடன் சேர ரகசிய பேரம் நடத்திவருகிறது. வட மாவட்டங்களில் பலமாக உள்ள வன்னியர் கட்சி, இதர உதிரிக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து மூன்றாவது அணி அமைக்க முயற்சிக்கிறது. தி.மு.க. ஆட்சியைக் கலைத்தது போதாது என்று உள்ளூர் அளவில் தி.மு.க.வின் அதிகாரத்தைப் பறித்து அதைப் பலவீனப்படுத்தும் நோக்குடன் கூட்டுறவு சங்கத் தேர்தலை மீண்டும் நடத்துமாறு ஜெயலலிதாவும் காங்கிரசும் கோருகின்றன. ஆட்சிக்கு வந்ததும் கருணாநிதி மீது விசாரணைக் கமிஷன் அமைத்து தண்டிப்பேன் என்று கொக்கரிக்கிறார் ஜெயலலிதா. ஜெயலலிதாவின் நடவடிக்கைகளுக்கு பின்புலமாகவும் தூபம் போடுபவர்களாகவும் வாழப்பாடி, தா.பாண்டியன் மட்டுமின்றி சோ, சுப்பிரமணியசாமி, அரசு உயர் வக்கீல் ஜி.ராமசாமி, சங்கராச்சாரி போன்ற பார்ப்பன கும்பலும் விஜய் மல்லையா, சாராய உடையார் போன்ற தரகு அதிகார முதலாளிகளும் உள்ளனர். பாசிச ஜெயலலிதாவின் கவர்ச்சி அரசியலும், பிழைப்புவாத - சுயநல அணிகளைக் கொண்ட கட்சித் தலைமையும், உதிரித் தொழிலாளர்கள் - கிராமப்புற பாமர மக்களின் ஆதரவைக் கொண்ட சமூக அடிப்படையும் அவர்களது நோக்கங்களுக்கு மிகவும் பொருத்தமானதாகவும் வசதியாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட ஜெயலலிதா கட்சி - ஆட்சியின்கீழ் அதிகார வர்க்கம் - போலீசை வைத்து தம்மால் எதையும் சாதிக்க முடியும் என்று அந்தப் பார்ப்பன கும்பல் நம்புகிறது.

சர்வதேச ஆயுதக் கடத்தல் - மாஃபியா கும்பலான ஆதனன் கஷோகி முதல் உள்ளூர் மாஃபியா வரை அனைவரது கூட்டாளியாக உள்ள சந்திரசேகர் ஆட்சியைப் பின்னாலிருந்து இயக்கும் பாசிச ராஜீவ் கும்பல், தமிழகத்தைத் தொடர்ந்து பீகாரின் ஜனதா தள ஆட்சிக்குக் குறிவைத்து விட்டது. இப்படி நாடு முழுவதும் தனக்குச் சாதகமான நிலைமையை உருவாக்கிக் கொண்டு மீண்டும் ஏகபோகமாக அதிகாரத்தைச் சுவைக்க பாசிச ராஜீவ் கும்பல் தயாராகி வருகிறது. எனவே இத்தகைய பாசிச - மாஃபியா - பிழைப்புவாத கூட்டுக்கும் ஆட்சிக்கும் எதிராகவும், படர்ந்து வரும் பாசிசத்துக்கு எதிராகவும், தமிழகத்தின் சுயநிர்ணய உரிமைக்காகவும் போராடுவதைத் தவிர வேறுவழியில்லை. அதற்கு முன்தேவையாக, திராவிடக் கட்சிகளின். மாயையிலிருந்து உழைக்கும் மக்களை விடுவிக்காமல் இது சாத்தியமில்லை.

படிப்பகம்

www.padippakam.com

# விலைவாசி உயர்வுக்கு வளைகுடாப் போர் காரணமா?

**இன்று நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கும், கடுமையான விலைவாசி உயர்வுக்கும் வளைகுடாப் போர்தான் காரணம் என சித்தரிக்கப்படுகிறது. வர்த்தக சூதாடிகளுக்கும், பதுக்கல் காரர்களுக்கும் மட்டுமல்ல - அரசுக்கும் வளைகுடாப் போர் ஒரு வரப்பிரசாதம். ஏகாதிபத்தியங்களுக்கு நாட்டை அடகு வைக்கும் பொருளாதாரக் கொள்கையை மறைக்கக் கிடைத்த மூடுதிரை!**

"அமெரிக்க ஆயுத வியாபாரிகளுக்கு கர்த்தர் விண்ணிலிருந்து அனுப்பிய அப்பம்தான் வளைகுடா யுத்தம்" என்று எழுதியிருக்கிறார் ஒரு அமெரிக்கப் பத்திரிக்கையாளர். சந்திரசேகர் அரசுக்கும் இது முற்றிலும் பொருந்தும். பன்னாட்டு நிறுவனங்களுக்கு முற்றிலுமாக நாட்டை அடகு வைப்பதற்கும், வர்த்தக சூதாடிகளின் விளையாட்டரங்கமாக நாட்டை மாற்றுவதற்கும் வளைகுடா யுத்தம் ஒரு கனமான மூடுதிரை.

கிலோ 3 முதல் 4 ரூபாய் வரை விற்றுக் கொண்டிருந்த வெங்காய் 10 ரூபாயாக உயர்வதற்கும், ஒட்டல்களில் காப்பியின் விலை 2 ரூபாயாகவும், இட்டிலி விலை ஒரு ரூபாய்க்கு மேலும் உயர்வதற்கும் வளைகுடா யுத்தம்தான் காரணம் என்றால் அதை மக்களால் சீரணிக்க முடிவதில்லை. "வெங்காயத்தை வைத்து வெடிகுண்டா செய்கிறான்?" என்று ஒரு 'பாமர' மனிதன் கேட்கிறார்.

ஆனால், பத்திரிக்கையாளர்களோ பக்கம் பக்கமாக ஆய்வுக் கட்டுரை எழுதுகின்றனர். வளைகுடா யுத்தம் ஒருவாரம் நடந்தால் நம் பொருளாதாரத்தின் நிலை என்ன? இரண்டு வாரம், மூன்றுவாரம், ஒரு மாதம் நடந்தால்... என்று ஆருடம் எழுதியபடி இருக்கிறார்கள். "இது முன் எப்போதும் கண்டிராத நெருக்கடி. இதை நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா சமாளித்து விட்டாரானால், அவருக்கு நோபல் பரிசே தரலாம்" என்று எழுதுகிறது ஒரு பத்திரிக்கை.

வளைகுடா யுத்தமும், அதையொட்டி பத்திரிக்கையாளர்களும் கிளப்பும் பீதியும் சந்திரசேகர் அரசுக்கு மாபெரும் வரப்பிரசாதங்கள். சர்வதேச நிதி நிறுவனக் கடன், பணவீக்கம், புதிய வரிவிதிப்புகள் எதுவாக இருந்தாலும் அதற்கு நியாயம் கற்பிக்க வளைகுடா யுத்தம் ஒரு முகாந்திரமாகிவிட்டது.

அமெரிக்காவின் தாக்குதல் தொடங்கி 5 மணி நேரத்தில் மத்திய அமைச்சரவையின் அவசரக் கூட்டம் கூட்டப்பட்டது. பிறகு எல்லா முதலமைச்சர்களும் வரவழைக்கப்பட்டனர். ஒன்றரை மாதத்துக்கான எரிபொருள் கையிருப்பில் உள்ளதால் பொருள் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படாதென்றும் விலைவாசிகள் உயர்வதற்கான அவசியம் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டது. ரயில், விமானப் போக்குவரத்தில் 25% குறைக்கப்பட்டது. பதுக்கல், கொள்ளை லாபக்காரர்களுக்குக் கடுமையான எச்சரிக்கைகள் விடப்பட்டன. ஆனால், எச்சரிக்கைகள் வந்து சேர்வதற்கு முன்பே விலைகள் உயர்ந்துவிட்டன. பெட்ரோல் பங்குகளின் வாயிலில் 'இருப்பு இல்லை" என்ற அட்டைகள் தொங்கத் தொடங்கிவிட்டன. நம்மீது ஏற்றப்படும் இந்தச் சுமைகளுக்கு யுத்தம்தான் காரணமா என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.




எண்ணெய் விலை ஏறுவது இதுதான் முதன்முறையா என்றால் இல்லை. 1975-76-இல் ஒரு பாரல் 2.83 டாலரிலிருந்து 10 டாலருக்கு - ஏறத்தாழ மூன்றரை மடங்கு விலை உயர்ந்தது. 1979 - 80 இல் மீண்டும் பாரலுக்கு 35 டாலராக விலை உயர்ந்தது. பிறகு விலை படிப்படியாகக் குறைந்து வளைகுடாப் போர் துவங்குவதற்கு முன் பாரலுக்கு 15 டாலர் என்ற நிலைக்கு வந்தது. தற்போது போர் தொடங்கியபின் 25 டாலராக மீண்டும் உயர்ந்துள்ளது. 70களில் ஏற்பட்ட எண்ணெய் விலை உயர்வோடு ஒப்பிடுகையில் தற்போதைய விலை உயர்வு மிக மிக் குறைவுதான் என்பதை இந்தியப் பொருளாதார ஆய்வு மையம் (CMIE) ஒப்புக் கொள்கிறது.

நாட்டின் மொத்த எண்ணெய்த் தேவையில் 40 சதவீதம் மட்டுமே இறக்குமதி செய்யப்படுகிறது. தற்போதைய எண்ணெய் விலையேற்றத்தின் காரணமாக அதிகபட்சமாக செலவிட வேண்டிய கூடுதல் அந்நியச் செலாவணி ரூ.2500 கோடி. இதுவன்றி, ஈராக், குவைத் ஆகிய நாடுகளுக்கான ஏற்றுமதி பாதிக்கப்படுவதால் ரூ.250 கோடியும், வளைகுடாவில் பணியாற்றும் இந்தியர்களை போர் அபாயத்தை ஒட்டி இந்தியாவுக்குத் திரும்ப அழைத்துவர ஆன செலவு ரூ.360 கோடியும் சேர்த்தால் மொத்தமாக வளைகுடாப் போரின் விளைவாக ஏற்படும் நேரடி அந்நியச் செலாவணி இழப்பு 3100 கோடி ரூபாய்.

இதை ஈடு செய்வதற்காக எண்ணெய் விலையேற்றத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடு என்ற முறையில் சர்வதேச நிதி நிறுவனத்திடம் கையேந்தி இந்திய அரசு பெற்றுள்ள கடன் 3275 கோடி ரூபாய். பெருந்தொழில் நிறுவனங்களுக்கு கூடுதல்வரி (சர்சார்ஜ்) மூலம் ரூ.400 கோடி, தொலை தொடர்பு கட்டண உயர்வு மூலம் ரூ.600 கோடி, வளைகுடா சர்சார்ஜ் ரூ.2300 கோடி, வருமான வரியின் மீதான சர்சார்ஜ் ரூ.2150 கோடி என புதிய வரிகளும் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் நடுத்தர வர்க்கம் செலுத்தும் வருமான வரி அதிகரிப்பைத் தவிர மற்றவை அனைத்தும் மறைமுகமாக விலையேற்றத்தைத் தூண்டக் கூடியவையே.

போர் தொடங்குவதற்கு முன்னால் ஒரு ஆங்கில வார ஏட்டுக்குப் பேட்டியளித்த நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா "ஒரு வேளை போர் தொடங்குமானால், நாம் பேரழிவைச் சந்திப்பது நிச்சயம்" என்று அலறினார். போர் துவங்கியவுடனே "ஒன்றரை மாதத்துக்குத் தேவையான எண்ணெய் கையிருப்பு உள்ளது... அச்சமில்லை... அச்சமில்லை" என்று பிரதமர் முழங்கிக் கொண்டிருக்கும்போதே "எண்ணெய்க் கையிருப்பு எவ்வளவு என்று சொல்ல முடியாது; அது அரசாங்க ரகசியம்!" (வெட்கக்கேடு!) என்கிறார் வர்த்தக அமைச்சர் சுப்பிர மணிய சாமி.

நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாக்கு; மரணப் படுக்கையில் விழுவதற்குத் தள்ளாடிக் கொண்டிருந்த இந்தியப் பொருளாதாரம் வளைகுடாப் போரில் தடுக்கி விழுந்திருக்கிறது. வளைகுடாப் போர் வெடிப்பதற்கு முன் இந்தியப் பொருளாதா




படிப்பகம்

www.padippakam.com

ரத்தின் நிலை என்னவாக இருந்தது என்பதைப் பார்த்தால் இந்த உண்மை புரிந்துவிடும்.

இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 1,30,000 கோடி ரூபாய். இந்தக் கடனுக்கான வருடாந்திரத் தவணைகளையும் வட்டியையும் கட்டுவதற்கே ஒவ்வொரு ஆண்டும் மேலும் மேலும் கடன் வாங்க வேண்டியிருக்கும்.

உள்நாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து - அதாவது மக்களின் சேமிப்பிலிருந்து பெற்றுள்ள கடன் 1,33,536 கோடி ரூபாய். நெருக்கடியின் காரணமாக 80ம் ஆண்டுகளின் துவக்கத்தில் 6 முதல் 7 சதவீதம் வட்டிக்குக் கடன் வாங்கிய அரசு 90 ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் 12 சதவிதமாக வட்டி விகிதத்தையும் உயர்த்திவிட்டது.




வருமான வரி, சுங்கவரி போன்ற வரி வருவாய்களில் இந்தியத் தரகு முதலாளிகள் கொடுக்க வேண்டிய தொகை மட்டும் 27,000 கோடி ரூபாய். நெருக்கிப் பிடித்து வசூலித்தாலும் 18,000 கோடி ரூபாய்க்கு மேல் வசூலிக்க இயலாது என்கின்றனர் முதலாளித்துவப் பத்திரிக்கையாளர்கள்.

ஆனால்,''முதலாளிகளைத்|தொல்லை செய்வதோ, சோதனை போடுவதோ எனக்குக் கட்டோடு பிடிக்காத விஷயம்'' என்கிறார் நிதி அமைச்சர். அதாவது தொழிலதிபர்கள் மனமுவந்து கொடுக்கும் தொகையை மட்டுமே வரியாகப் பெற்றுக் கொள்வது தான் அரசின் 'தொழிற் கொள்கை'.

சென்ற ஆண்டு 9 சதவீதமாக இருந்த பணவீக்கம் இந்த ஆண்டு 15 சதவீதமாக அதிகரிக்கும் — விளைவு கடுமையான விலையேற்றம்.

1990 - 91க்கான வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை என்று வி.பி.சிங் அறிவித்திருந்தது 7206 கோடி ரூபாய். இன்று அத்திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் பற்றாக்குறை 14,000 கோடி ரூபாயை எட்டவுள்ளது. பற்றாக்குறையை சரிக்கட்ட மூன்று வழிகள் உள்ளன. கடன் வாங்குவது, நோட்டடித்துக் குவிப்பது, வரிவிதிப்பது — இவற்றில் எதைச் செய்தாலும் விளைவு ஒன்று தான் - அது பணவீக்கம், விலையேற்றம்.

ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாக இருப்பதால் 1990 - 91க்கு எதிர்பார்க்கப்பட்ட வர்த்தகப் பற்றாக்குறை 800 கோடி ரூபாய். எண்ணெய் விலையேற்றத்தால் இது 10000 கோடியாக அதிகரிக்கும்.

அந்நியச் செலாவணிக் கையிருப்பு 2500 கோடி ரூபாய். வெறும் 20 நாட்களுக்கான இறக்குமதிச் செலவுக்குக் கூட இது காணாது. எண்ணெய் விலை உயர்ந்துள்ள இந்த நேரத்தில் பணம் கொடுத்து எண்ணெய் வாங்க வக்கில்லாமல் கடனுக்கு மட்டுமே வாங்க முடியும் என்ற நிலை உள்ளது. வளைகுடா தவிர்த்த மற்ற எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் கடனுக்கு எண்ணெய் தர மறுத்துவிட்டன. ரூபாய் - ரூபிள் ஒப்பந்தத்தின் கீழ் எண்ணெய் தரமுடியாதென்றும் டாலருக்குத் தான் எண்ணெய் என்றும் கைவிரித்து விட்டது 'நண்பன்' ரசியா. பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத்தை இந்திய அரசு எண்ணெய்க்காக அணுகியபோது இந்திய அரசை நம்பிக் கடன்தர இயலாதென்றும் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் வங்கியொன்று ஜாமீன் தருவதாக இருந்தால், யோசிக்கலாம் என்று கூறிவிட்டது அந்த நிறுவனம். சந்திரசேர் அரசு இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் வங்கிகளின் வாயிற்படிகளில் தவம் கிடக்கிறது.

இதுதான் வளைகுடாப் போர் துவங்குவதற்கு முன் இந்தியப் பொருளாதாரத்தின் நிலைமை. இந்நிலைமையின் விளைவாகத் தோன்றியுள்ள பணவீக்கத்திற்கும், விலையேற்றத்திற்கும், புதிய வரிவிதிப்புகளுக்கும் இப்போது வளைகுடாப் போர் காரணமாகச் சித்தரிக்கப்படுகிறது. எண்ணெய் விலையேற்ற நெருக்கடியைச் சமாளிப்பதற்கு என்று சர்வதேச நிதி நிறுவனத்திடம் தற்போது வாங்கியுள்ள 3275 கோடி ரூபாய் கடனுக்கு என்னென்ன நிபந்தனைகள் விதிக்கப் பட்டுள்ளன என்பதை இதுவரை அரசு வெளியிடவில்லை. வி.பி.சிங் ஆட்சிக் காலத்திலேயே இக்கடனை வாங்குவது பற்றி முடிவு செய்யப்பட்டு விட்டதால் இது பற்றி எந்த கட்சியும் பாராளுமன்றத்தில் வாய் திறக்கவே இல்லை. மார்ச், ஏப்ரல் மாதங்களில் மேலும் 3 பில்லியன் டாலர் (சுமார் 5400 கோடி ரூபாய்) அளவுக்கு சர்வதேச நிதி நிறுவனத்திடம் கடன் வாங்குவதென்று சந்திரசேகர் அரசு திட்டமிட்டுள்ளது.

80களின் துவக்கத்தில் இந்திரா அரசு ஐ.எம்.எஃபிடம் வாங்கிய கடனே இன்னமும் அடைபட்டுத் தீராத நிலையில் புதிதாக வாங்கப்படும் இக்கடன் இந்தியப் பொருளாதாரத்தின்மீது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிடியை மேலும் இறுக்கும். டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு மேலும் குறைக்கப்படும். இதன் விளைவாக மொத்த அந்நியக் கடனின் அளவு மேலும் அதிகரிக்கும். பட்ஜெட் பற்றாக்குறையைத் தவிர்ப்பதென்ற பெயரில் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் வெட்டப்படும். அந்நியச் செலாவணி வரவை அதிகரிப்பதற்காக ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்தியும் அதற்கான சலுகைகளும் அதிகரிக்கப் பட்டு உள்நாட்டுத் தேவைக்கான உற்பத்தி புறக்கணிக்கப்படும். மொத்தத்தில் பத்தாண்டுகளுக்கு முன்பிருந்ததைக் காட்டிலும் நிபந்தனைகள் மேலும் குரூரமானவையாக இருக்கும்.

நிதியமைச்சர், அரசின் பொருளாதார ஆலோசகர்கள், பொருளாதார வல்லுனர்கள் ஆகியோர் இந்தியப் பொருளாதாரத்தை நெருக்கடியிலிருந்து 'மீட்பதற்கு' முன்வைக்கும் ஆலோசனைகள் சர்வதேச நிதி நிறுவனத்தின் ஆணைகளுடன் முரணின்றி ஒத்துப்போகின்றன. இவை வரவிருக்கும் பட்ஜெட்டிலும் பிரதிபலிக்கும்.

**நிதிப்பற்றாக்குறையை சமாளிக்க:** நட்டத்தில் நடைபெறும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு மானியம் நிறுத்தப்படும் அல்லது தனியார் துறைக்கு தாரை வார்க்கப்படும். நியாய விலைக் கடைகளுக்குத் தரப்படும் மானியம் நிறுத்தப்பட்டு இவை பகுதியளவிலோ முழுமையாகவோ இழுத்து மூடப்படும். உரம், பூச்சி மருந்து போன்ற விவசாய இடுபொருட்களுக்கான மானியம் குறைக்கப்படுவதால் இவற்றின் விலை ஏறும். உள்நாட்டு உபயோகத்திற்கான பொருட்கள் மீது

*நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாக்கு; மரணப் படுக்கையில் விழுவதற்குத் தள்ளாடிக் கொண்டிருந்த இந்திய பொருளாதாரம் வளைகுடாப் போரில் தடுக்கி விழுந்திருக்கிறது. வளைகுடாப் போர் வெடிப்பதற்கு முன் இந்தியப் பொருளாதாரத்தின் நிலை என்னவாக இருந்தது என்பதைப் பார்த்தால் இந்த உண்மை புரிந்துவிடும்.*



படிப்பகம்

www.padippakam.com

மறைமுக வரி ஏற்றப்படும். கடும் விலைவாசி ஏற்றம் ஏற்படும். உலகச் சந்தையில் போருக்குப் பின் தோன்றும் கடும் போட்டியைச் சந்திக்க வேண்டுமெனில் பொருட்களின் விலை மேலும் குறைக்கப்பட வேண்டும். எனவே ஏற்றுமதிக்கான பொருட்கள் மீது வரிவிதிப்பு இருக்காது.

**உள்நாட்டு வருவாயை அதிகரிக்க:** ஏறத்தாழ 80,000 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்து எல்லா பொருளாதாரத் திட்டங்களையும் கேலிக்குள்ளாக்கும் கறுப்புப் பணத்தை ஒழிக்க முடியாதென்பதால் அதை வெள்ளையாக்க அரசாங்க பத்திரம் வெளியிடும் முயற்சிகள் நடக்கும். பொதுத்துறை நிறுவனங்களுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்வது நிறுத்தப்பட்டு உள்நாட்டில் பங்கு விற்பனை மூலம் மூலதனத்தை உருவாக்கிக் கொள்ளுமாறு அவை கோரப்படும். வருமான வரி செலுத்துவதற்கான குறைந்தபட்ச வருவாய் வரம்பு மேலும் குறைக்கப்படும்; இதுவரை வருமான வரி கட்டாத நடுத்தர வர்க்கப் பிரிவினர் வருமான வரி கட்ட வேண்டி வரும். அனைத்திலும் சுலபமான வழியாக மேலும் பல ஆயிரம் கோடிக்கு நோட்டடிக்கப்படும்; தபால், ரயில் கட்டணங்கள் உயர்த்தப்படும்.

**அந்நியச் செலாவணி இருப்பை அதிகரிக்க:** ஏற்றுமதியாளர்களுக்கான சலுகைகள் அதிகரிக்கப்படும். வெளிநாட்டு நிறுவனங்கள் நுழைவதற்குத் தடையாக உள்ள அனைத்து சட்டத் தொல்லைகளும் ஒழிக்கப்படும். வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்களுக்கு (NRI) முன்னுரிமை என்ற போர்வையில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைய வசதி ஏற்படுத்தப்படும். வெளிநாட்டு வங்கிகள், சர்வதேச நிதி நிறுவனத்திடம் மேலும் அதிகமாகக் கடன் பெற முயற்சி செய்யப்படும்.

**பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த:** ஐந்து ஆண்டுகளாக பூதாகாரமாகப் பெருகி வளர்ந்திருக்கும் நுகர்பொருள் பொருளாதாரத்தின் விளைவாகவும், நோட்டடித்துக் குவிப்பதன் விளைவாகவும் தோன்றும் பணவீக்கத்தைத் தடுக்க அமைப்பு ரீதியாகத் திரண்ட தொழிலாளர், அரசு ஊழியர் ஆகியோரின் தலையில் கை வைக்கப்படும். அரசுத் துறைகளில் ஆளெடுப்பு முற்றிலுமாக நிறுத்தப்படும்; நவீன மயமாக்கலுக்கு வசதியாக தானாக முன்வந்து ஓய்வு பெறும் திட்டம் மூலம் ஆட்குறைப்பு முடுக்கி விடப்படும். விலைவாசி உயர்வின் காரணமாகக் கொடுக்க வேண்டியிருக்கும் பஞ்சப்படி முடக்கப்பட்டு ஊழியர் வைப்புத் தொகையில் சேர்க்கப்படும்.

**எரிபொருள் சிக்கனத்திற்கு:** பெட்ரோல், டீசலின் விலை மேலும் உயர்த்தப்படும். ஆனால், உபயோகிப்பு அளவைக் குறைக்க கட்டுக்கட்டாக அறிக்கைகளும் விளம்பரங்களும் மட்டுமே வெளிவரும். அதே நேரத்தில் மக்களின் அன்றாட எரிபொருள் தேவையான மண்ணெண்ணெய் போன்றவற்றின்மீது அதிக கட்டுப்பாடும், பஸ் கட்டண உயர்வும் மட்டும் அமுலுக்கு வரும். இந்தியப் பொருளாதாரத்தை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான யோசனைகள் என்ற பெயரில் முன்வைக்கப்படும் இவையனைத்தும் நெருக்கடியின் சுமையை மக்கள்மீது வைப்பதற்கான திட்டங்களே. விலைவாசி ஏற்றமும் வேலையின்மையும் மேலும் அதிகரிப்பதற்கும் தேசியத் தொழில்கள் மேலும் நலிவடைவதற்கும் மட்டுமே இவை வழிவகுக்கும். நெருக்கடியின் சுமையை பகுதியளவிற்கேனும் தாங்கள் ஏற்றுக் கொள்ளும்படியான எந்த மாற்று யோசனைகளையும் ஆளும் வர்க்கங்கள் முன்வைப்பதுமில்லை; அமல் படுத்துவதுமில்லை.

*தனது ஆயுள் பற்றியே நிச்சயமில்லாமல், கிடைத்திருக்கும் அவகாசத்தில் சுருட்டுவதையே மட்டுமே கொள்கையாகக் கொண்ட ஒரு மாஃபியா கும்பல் நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறது. நாட்டை பகிரங்கமாக ஏலம்கூறி விற்பதற்கு ஒரு வாய்ப்பாகவும், முகாந்திரமாகவும், வரப்பிரசாதமாகவும் சந்திர சேகர் கும்பலுக்கு வாய்த்திருப்பதுதான் வளைகுடாப்போர்.*

**ராணுவச் செலவினங்களைக் குறைப்பது:** சென்ற வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டை விட 12 சதவீதம் அதிகமாக ராணுவத்திற்குச் செலவிடப்பட்டுள்ளது. இது கேள்விக்குள்ளாக்கப்படவேயில்லை. ராணுவத்திற்கான தற்போதைய ஒதுக்கீட்டில் குறைந்தது 10 முதல் 20 சதவீதத்தைக் குறைக்கலாம் என்று முதலாளித்துவப் பொருளாதார வல்லுனர்களே கருதுகிறார்கள். ஆனால், அமெரிக்காவிடமிருந்து பாட்ரியாட் ஏவுகணையையும், அபிரகாம் டாங்கியையும் வாங்குவது எப்படி என்றுதான் அரசு இனி சிந்திக்கத் தொடங்கும்.

**எரிபொருள் சிக்கனம்:** போக்குவரத்து வாகன உபயோகத்திற்கான மொத்த எரிபொருள் செலவில் 50% அரசு எந்திரத்தால் பயன்படுத்தப்படுவதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. இதைக் குறைப்பதன் மூலமும், கார் போன்ற ஆடம்பரப் பயன்பாடுகளைத் தடுத்து பொதுப் போக்குவரத்தை அதிகரிப்பதன் மூலமும் கணிசமான எரிபொருளைச் சேமிக்க இயலும். அதுமட்டுமல்ல; அசாமில் அரசின் அடக்குமுறையின் விளைவாக அங்கே எண்ணெய் உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் மின்சக்தி நிலையங்கள் அவற்றின் ஆற்றலில் 48% மட்டுமே பயன்படுத்தி உற்பத்தி செய்கின்றன. இவை சீர் செய்யப்படுவதன் மூலம் பெருமளவு எரிபொருள் தேவையை சுய சார்பாகவே பெற இயலும். எண்ணெய்த் தேவை முழுவதற்கும் வெளிநாடுகளைச் சார்ந்துள்ள ஜப்பான், மேற்கு ஜெர்மனி போன்ற பல நாடுகள் நிலைமையை சமாளிக்கும் போது 40% எண்ணெய் மட்டுமே இறக்குமதி செய்யும் இந்தியா இந் நெருக்கடியைச் சமாளிக்க இயலாது என்று கூறுவது மிகப் பெரிய மோசடி. எண்ணெய்க் கிணறுகள் பல உள்நாட்டில் கண்டு பிடிக்கப்பட்ட போதும் இறக்குமதி அதிகரிக்கக் காரணம் கடந்த 5 ஆண்டுகளில் ராஜீவ் கும்பலின் பொருளாதாரக் கொள்கையால் நாட்டில் பெருத்துப்போன அந்நியக் கூட்டு மோட்டார் வாகனத் தொழில்தான்.

**பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த:** பிரதானமாக எடுக்க வேண்டிய நடவடிக்கை கறுப்புப்பண முதலைகள் மற்றும் வரி ஏய்ப்பு செய்யும் பெருந்தொழிலதிபர்கள் மீதுதான். மறைமுக வரிகளாக மக்களிடம் வசூலித்து அரசுக்குக் கட்டாமல் தரகு முதலாளிகள் ஏமாற்றி வரும் தொகையை வசூலிப்பதன் வாயிலாகக் கணிசமான அளவு வரி வருவாயை அதிகரிக்க இயலும். வரி வருவாயில் ஆகப் பெரும்பான்மையைத் தின்று செரிக்கும் போலீசு மற்றும் நிர்வாக எந்திரத்தின் அளவை வெட்டிக் குறைப்பது மற்றும் விரிவு படுத்தாமலிருப்பதன் மூலம் செலவினங்களைக் குறைக்க முடியும்.

நாடு இத்தகைய மோசமான நெருக்கடியில் சிக்கியுள்ளதே தவிர எல்லாத் தரகு முதலாளித்துவ நிறுவனங்களும் இதுவரை இல்லாத அளவு லாபம் கண்டுள்ளன. அந்நிய நிறுவனங்கள் பற்றிச் சொல்லவே. வேண்டாம். (எடுத்துக் காட்டாக அரசுடமை வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கையில் 0.3 சதவீதமே உள்ள வெளிநாட்டு வங்கிகள் சென்ற ஆண்டில் மட்டும் 190 கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளன. இது மொத்த அரசுடமை வங்கிகளின் லாபத்தில் 55%)

ஏகாதிபத்திய நலனுக்காகத் தாரை வார்க்கப்பட்ட இந்தியப் பொருளாதாரத்தை, அதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள அரசு வேறு திசையில்-தற்காலிகமாகக்கூட திருப்பவியலாது. ஒரு சோசலிசச் சவடால் நடவடிக்கையாகச் சிலவற்றைச் செய்வதற்குக் கூடத் திராணியற்ற நிலையில் இன்றைய அரசு இருக்கிறது. தனது ஆயுள் பற்றியே நிச்சயமில்லாமல், கிடைத்திருக்கும் அவகாசத்தில் சுருட்டுவதை மட்டும் கொள்கையாகக் கொண்ட ஒரு மஃபியா கும்பல் நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறது. நாட்டை பகிரங்கமாக ஏலம் கூறி விற்பதற்கு ஒரு வாய்ப்பாகவும், முகாந்திரமாகவும், வரப்பிரசாதமாகவும் சந்திரசேகர் கும்பலுக்கு வாய்த்திருப்பதுதான் வளைகுடாப் போர்.

நெருக்கடிகளின் காரணம் அதுவல்ல; காரணத்தைக் கண்டறிய வெகு நீண்ட ஆழமான ஆய்வுகள் எதுவும் தேவையில்லை. ஆறே ஆண்டுகளில் நாட்டின் அந்நியக் கடன் 4 மடங்காக அதிகரித்தது எப்படி என்பதை மட்டும் பரிசீலித்தால் போதும் — இந்தியப் பொருளாதாரத்தைப் பீடித்திருக்கும் நோயின் காரணத்தைக் கண்டறிந்துவிட முடியும்.

● பஷீர்.



படிப்பகம்

www.padippakam.com

# பொய்யும் அவதூறும் போர்ச் செய்தியாக...

**ஏகாதிபத்திய நிறுவனங்கள் பரப்பும் வளைகுடாப் போர் பற்றிய ஒருதலைப்பட்சமான செய்திகள்தான் இன்று உலகெங்கும் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இச்செய்திகள் மூலம் அமெரிக்காவை நியாயத்துக்காகப் போராடும் ஜனநாயகவாதியாகவும், சதாம் உசேனை உலக மக்களின் எதிரியாகவும் அவை சித்தரிக்கின்றன. உண்மைகளை இருட்டடிப்பு செய்துவிட்டு, கருத்து ரீதியாக மக்கள் மீது நடத்தப்படும் இன்னுமொரு யுத்தமே இது.**

மேலை நாட்டுப் பத்திரிக்கைகள் என்றாலே அவை விபரங்கள், ஆய்வுகள் மூலம் உண்மைகளை உலகுக்கு எடுத்துரைப்பவை; நேர்மையும் பொறுப்புணர்வும் கொண்டவை. பொய்கள், கிசுகிசுக்கள், ஊகங்கள் அடிப்படையிலான செய்திகளுக்கு அங்கே இடமில்லை என்று இங்குள்ள அறிவுஜீவிகள் பெருமையாகக் குறிப்பிடுவதுண்டு. ஆனால், இந்த மதிப்பீடுகள் எல்லாமே பொய்யென வளைகுடாப் போரைப் பற்றிய மேற்கத்திய பிரச்சார சாதனங்களின் செய்திகள் நிரூபித்துக் காட்டிவிட்டன. அண்டப்புளுகு, வதந்தி, போர்வெறி, இனவெறி, காழ்ப்புணர்ச்சியோடு அவை ஏகாதிபத்திய ஆதிக்க வெறியை நியாயப்படுத்தி கீழ்த்தரமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றன.

செய்தி - தகவல் தொடர்புத் துறையில் இன்று ஏகாதிபத்திய நிறுவனங்கள்தான் ஏகபோகமாக உள்ளன. இவை பரப்பும் செய்திகள்தான் இன்று உலகெங்கும் உண்மைச் செய்திகளாக்கப் படுகிறது. விஸ்நியூஸ், டபிள்யூ.டி.என் எனும் இரு மிகப்பெரிய மேற்கத்திய தொலைக்காட்சி நிறுவனங்கள் தான் இன்று ஏகபோகமாக உள்ளன. சி.என்.என். என்னும் மேற்கத்திய வீடியோ செய்தி நிறுவனம்தான் இன்று போர்ச் செய்திகளை ஒளிபரப்புவதில் முன்னிலை வகிக்கிறது. அமெரிக்க தூதரகத்தின் மூலம் இதன் ஒளிபரப்பு இந்திய பத்திரிக்கையாளர்களுக்கு காட்டப்பட்டு அவையே இன்று செய்திகளாக்கப் படுகின்றன.

இதே போல, அசோசியேடட் பிரஸ், யுனைடெட் பிரஸ் இன்டர்நேஷனல், ஏஜென்ஸ் பிரான்ஸ் பிரஸ், ரூய்டெர் — ஆகிய 4 பெரும் ஏகாதிபத்திய நிறுவனங்களே இன்று செயதித் துறையில் ஏகபோகமாக உள்ளன. இவை பரப்பும் செய்திகளை வைத்தே இந்திய செய்திக்குழுமம் (PTI) செய்திகளைத் தயாரித்து பத்திரிக்கைகளுக்கு அனுப்புகிறது. இந்த ஏகாதிபத்திய நிறுவனங்கள் இன்று எத்தகைய செய்திகளைப் பரப்புகின்னறன?

### ஏகாதிபத்தியங்களின் ஆணவமும் அவதூறு பிரச்சாரமும்

''சதாம் உசேன் ஒரு வன்முறையாளன்; இளவயதிலேயே ரகசிய ரௌடிக் கும்பலுடன் இருந்தவன்; ஆட்சிக் கவிழ்ப்பு சதியில் இறங்கியவன். தனது கருத்துக்கு உடன்படாத மந்திரிகளையும் ஏன், சொந்த மாமனையே கூட ரகசியமாகக் கொன்ற கொடுங்கோலன்'' என்று ஏகாதிபத்தியங்கள் உருவாக்கிய கருத்து இன்று உலகெங்கும் பரவியுள்ளது. வளைகுடா போர் துவங்கியதும் ஏகாதிபத்தியங்களின் கீழ்த்தரமான பிரச்சாரம் எல்லை மீறியது. ஏகாதிபத்திய கூட்டணிப்படை வீரர்களை, ''போராளிகள், நாயகர்கள், நெஞ்சுரம் மிக்கவர்கள், எஃகுறுதி கொண்டவர்கள், கட்டுப்பாடு மிக்கவர்கள்'' என்று போற்றி எழுதிய அதே நேரத்தில் ஈராக்கிய படைவீரர்களை ''கோழைகள், முட்டாள்கள், காகிதப் புலிகள், பைத்தியக்கார நாய்கள், பாக்தாத் விபச்சாரிகளின் புதல்வர்கள், குருட்டுத்தனமான அடிமைகள், காக்காய் கூட்டம்'' என்று கொச்சைப் படுத்தின. அமெரிக்க அதிபர் புஷ்ஷை ''அமைதிக்காக நிற்பவர், உறுதியானவர், ராஜதந்திரி'' என்று புகழ்மாலை சூட்டின. சதாம் உசேனை ''போர்வெறியன், அமைதியை அழிக்கும் பிசாசு, கொடுங்கோலன், காட்டுமிராண்டி'' என்று சித்தரித்தன. இவை ஏகாதிபத்திய கூட்டணிப் படையினரை உற்சாக மூட்டுவதற்காக செய்யப்பட்ட கொச்சையான் பிரச்சாரமாகக் கருத முடியாது. உண்மையில் ஒரு மூன்றாம் உலகநாடு வல்லமை மிக்க அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடுவதால் ஏற்பட்ட வெறியும் ஆணவமும்தான் இப்பிரச்சாரத்தில் மிதமிஞ்சி வழிகிறது.

ஏகாதிபத்தியங்கள் காட்சியும் கருத்துமாக பிரச்சாரம் செய்வதோடு நின்றுவிடவில்லை. அதையே வெறியூட்டி மக்களின் சிந்தனையில் திட்டமிட்டே திணிக்கவும் செய்தன. சதாம் உசேனை இழிவு படுத்துவதற்காகவே அமெரிக்காவில் சதாமின் உருவம் அச்சிடப்பட்ட கழிப்பறைக் காகிதங்கள் விற்பனை செய்யப் படுகின்றன. குழந்தைகள் அம்பு எறிந்து விளையாடும் இலக்குப் பலகையில் சதாமின் உருவம் பொறிக்கப் படுகின்றது. விளையாட்டுப் பொம்மைகளில் ஒன்றின் பெயர் சதாம். சாவி கொடுத்தால் அதன் தலையில் சுத்தியல் ஓங்கி அடிக்கும். இப்போது அந்தப் பொம்மைகள் அமெரிக்காவிலும் ஹாங்காங்கிலும் பரபரப்பாக விற்பனையாகின்றன.

அதே சமயம் பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு சதாம் உசேன் என்று பெயர் சூட்டக்கூட மேலை நாடுகளில்

யுத்த முனையில் செய்தி சேகரிக்கும் பத்திரிக்கையாளர்கள்; பொய்க்கும் புனைச்சுருட்டுக்கும் நவீன விஞ்ஞான சாதனங்கள்.





படிப்பகம்

www.padippakam.com

உரிமை மறுக்கப் படுகிறது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் தம்பதிகள் தமது குழந்தைக்கு சதாம் என்று பெயர் சூட்டிய போது அதைப் பதிவு செய்ய அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

ஏகாதிபத்தியங்களின் இந்த எதிர்ப் பிரச்சாரத்தைக் காட்டி, குவைத்தை ஈராக் ஆக்கிரமித்ததை நாம் நியாயப்படுத்த முன்வரவில்லை. ஆக்கிரமிப்பாளன் ஈராக்கைப் போலவே ஆதிக்க வெறியன் அமெரிக்காவும் வளைகுடா மக்களின் எதிரிதான். ஆனால், இவற்றிலே ஈராக்தான் முதல் எதிரி என்பது போலவும் அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்கள் குவைத்தை மீட்கும் புனிதப் போரில் ஈடுபட்டுள்ளதைப் போலவும் பிரச்சாரம் செய்வதும் நியாயப் படுத்துவதும் அயோக்கியத்தனமானது.



யுத்தமுனை செய்தி; விறுவிறுப்பான சினிமா!

### 'நாகரீக' வாதிகளின் காட்டுமிராண்டித்தனம்

போருக்குமுன், பிரிட்டனின் பிரபல ஆங்கில ஏடான ''தி கார்டியன்'' திரு ஜார்ஜ் புஷ், திரு கோர்பச்சேவ் என்று மரியாதையோடு குறிப்பிட்ட அதே சமயம் திரு என்ற அடைமொழியோ, அதிபர் என்ற குறியீடோ ஏதுமின்றி, வெறுமனே சதாம் உசேன் என்று எழுதியது. இதர பத்திரிக்கைகள் இன்னும் கொச்சையாக எழுதத் தொடங்கின. ஈராக்குக்கு எதிராகப் போரில் குதித்த ஏகாதிபத்தியங்கள் மற்றும் அவற்றின் கூட்டணிப் படைகளுக்கு ''நேச நாடுகளின் படைகள்'' ''பன்னாட்டுப் படைகள்'' என்று பிரிட்டிஷ் பத்திரிக்கைகள் பெயர் சூட்டின. இரண்டாம் உலகப் போரில் பாசிசத்துக்கு எதிரான நேச நாட்டுப் படைகளைப் போலவே இப்படைகளும் சித்தரிக்கப்பட்டன. அதாவது சதாம் உசேனை இட்லரோடு ஒப்பிடவும், உலகமே அவருக்கு எதிராக நிற்பதுபோல் காட்டவும், பன்னாட்டுப் படைகள் என்று திட்டமிட்டே பெயர் சூட்டினர். இதேபோல, தோழர் ஸ்டாலினை சர்வாதிகாரியாகச் சித்தரித்து கம்யூனிச எதிர்ப்பைக் கக்கும் ஏகாதிபத்தியங்கள், இப்போது சதாம் உசேனை ஸ்டாலினின் வாரிசு என்று ஒரு பொய்க்கதையை அவிழ்த்து விட்டுள்ளன.

போர் துவங்குவதற்கு முன்னரே, ராணுவ வல்லுநர்களின் பேட்டியை பிரிட்டிஷ் தொலைக்காட்சி ஒளிபரப்பியது. ஈராக்கைத் தாக்கும் வியூகங்களை விவரித்த அவர்கள் சதாமைக் கொன்றொழிப்பதும் தங்கள் திட்டமாகும் என்று பகிரங்கமாகப் பேட்டியளித்தனர். நாகரீகமிக்க மேலைநாட்டுப் பத்திரிக்கைகள் இதைக் கண்டிக்கவோ, விமர்சிக்கவோ முன்வரவில்லை. மாறாக சதாமைக் கொல்ல வேண்டும் என்பதையே தலைப்புச் செய்தியாக பரபரப்புடன் வெளியிட்டன. கேவலம்; மூன்றாம் உலக நாட்டின் அதிபர்தானே! - என்ற ஏகாதிபத்திய திமிரோடு இவை சதாம் உசேனை இழிவுபடுத்தின. ''சதாம் உசேன் சாவதையே நான் விரும்புகிறேன்'' என்று புஷ் இப்போது பகிரங்கமாகப் பேட்டியளிக்கிறார். மூன்றாம் உலக நாட்டுத் தலைவர் யாராவது இதே போல ஜார்ஜ் புஷ்ஷைக் கொல்லுவோம் என்று கூறியிருந்தால், ஏகாதிபத்திய உலகம் இதை 'காட்டுமிராண்டித்தனம் - பயங்கரவாதம்' என்று கூப்பாடு போட்டிருக்கும். ஆனால், அமெரிக்க அதிபரின் ஆணவமிக்க இந்த பேச்சு ஈராக்குக்கு எதிரான நாகரீகமான பதிலடியாக சித்தரிக்கப் படுகிறது.

### அமெரிக்க ஓநாயின் திடீர் கரிசனை

சதாம் உசேன் ஜனநாயக விரோதி; சர்வாதிகாரி; போர் வெறியன என்று பிரச்சாரம் செய்து வந்த ஏகாதிபத்தியங்கள் தங்களை மாபெரும் ஜனநாயக வாதிகளாகவும், குவைத் மட்டுமின்றி மேற்காசிய மக்களின் மீது அக்கறை கொண்டவர்களைப் போலவும் கருத்துக்களைப் பரப்பின. அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்கள் நடத்திய ஆக்கிரமிப்புகள், ஆட்சிக் கவிழ்ப்புகள், ரகசிய சதிகள், கொலைகளைப் பற்றியும் உள்நாட்டில் அவற்றின் ஜனநாயக விரோத அடக்குமுறைகளையும் எழுத பக்கங்கள் போதாது. அது ஒருபுறமிருக்கட்டும். ஜனநாயகத்துக்காக நிற்கும் இந்த ஏகாதிபத்தியங்கள் ஜனநாயக விரோத ஆட்சி நடத்தும் அராபிய ஷேக்குகளுடன் கூட்டுச் சேர்வது எந்த வகையில் நியாயமானது என்று தெரியவில்லை. மேலும், மேற்காசிய - பாலஸ்தீன பிரச்சினைக்கு மூலகாரணமே ஏகாதிபத்தியங்கள்தான். மேற்காசிய பேட்டை ரௌடியாக இஸ்ரேலை ஊட்டி வளர்த்து பாலஸ்தீனிய மக்களை நரவேட்டையாடுவதும் இதே ஏகாதிபத்தியங்கள்தான்.

அவ்வளவு ஏன்? போருக்கு முன்னர் ஈராக்கிலிருந்தும் குவைத்திலிருந்தும் அங்கு பணியாற்றிய அன்னிய நாட்டு உழைப்பாளிகள் தமது நாட்டுக்கு திரும்ப முடியாமல் அவதிப்பட்டார்களே; பாலைவனத்தில் சொட்டுத் தண்ணீருக்காவும், இளங் குழந்தைகளைக் கையிலேந்தி ஒரு குவளை பாலுக்காவும் தவித்தார்களே, அப்போது அவர்கள் மீது பரிவு காட்டவோ, நிவாரண நிதி திரட்ட உலக மக்களிடம் பொதுக் கருத்தை உருவாக்கவோ முன்வராத மேலைநாட்டு பிரச்சார சாதனங்கள்தான் இப்போது ஆசிய மக்கள் மீது அக்கறை கொண்டதைப் போல ஏய்க்கின்றன. போருக்கு முன்பு ஈராக் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த மேலை நாட்டினரைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதி கண்ணீர் வடித்த இப்பத்திரிக்கைகள்; தப்பியோடி வந்த ஆசிய மக்களின் அவலத்தை திட்டமிட்டே புறக்கணித்தன. ஏனெனில் இவர்கள் ஏழை ஆசிய நாடுகளின் தொழிலாளர்கள் என்ற அலட்சியம்தான் காரணம்.

### சுற்றுச்சூழலை நஞ்சாக்கியது யார்?

போர் தீவிரமடைந்ததும் பாரசீக வளைகுடாவில் எண்ணெயைக் கொட்டி கடல் நீரை ஈராக் மாசுபடுத்தி விட்டதாக செய்திகள் வந்தன. இதை ஈராக்தான் செய்ததா அல்லது அமெரிக்காவே இப்படிச் செய்துவிட்டு ஈராக் மீது பழியைப் போடுகிறதா என்று இன்னமும் உறுதிப்படுத்தப் படவில்லை. ஆனாலும், சுற்றுச் சூழலை நஞ்சாக்கும் கொடிய விரோதியாக ஈராக்கைச் சித்தரித்து, கடல் பிராணிகளும், மீன்களும், அரிய பறவைகளும் துடிதுடித்துச் சாவதைப் படம் பிடித்து ஈராக்கின் மீது ஏகாதிபத்தியங்கள் வெறியூட்டின. இதன்மூலம் தாங்கள் போர் விதிமுறைகளை மீறாமல் கட்டுப்பாட்டுடன் போரிடுவதைப் போல பாசாங்கு செய்கின்றன.

கடல் நீரில் எண்ணெயைக் கொட்டி மாசுபடுத்திய செயல் மனித குலத்துக்கு எதிரான காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கைதான். ஆனால், அதைவிட பலமடங்கு அதிகமாகவே ஏகாதிபத்தியங்கள் இப்போரின் மூலம் சுற்றுச்சூழலை நஞ்சாக்கியுள்ளன. அரிய கடல் பிராணிகளைவிட பன்மடங்கு அதிகமாக மனித உயிர்களைப் பறித்துள்ளன. ஏகாதிபத்திய செய்தி நிறுவனங்களின் கூற்றுப்படியே, ஹிரோஷிமாவில் இரண்டாம் உலகப் போரின் போது வீசிய குண்டுகளைவிட 12 மடங்கு அதிகமான எடையுள்ள குண்டுகள் ஈராக்கின் மீது வீசப்பட்டுள்ளது. இளங்குழந்தைகள் உட்பட பல்லாயிரக்கணக்கான ஈராக்கிய மக்கள் கொல்லப் பட்டுள்ளனர். சுற்றுச் சூழல் மாசுபடுவதை விட இது மிகவும் கொடூரமானது. ஆனால், இந்த விவகாரம் திட்டமிட்டே பின்னுக்குத் தள்ளப்பட்டு, கடல் நீரில் எண்ணெய்க் கொட்டியதுதான் மாபெரும் குற்ற



படிப்பகம்

www.padippakam.com

**சதாம் உசேனை இழிவுபடுத்துவதற்காகவே அமெரிக்காவில் சதாமின் உருவம் அச்சிடப்பட்ட கழிப்பறைக் காகிதங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அமெரிக்க விளையாட்டுப் பொம்மைகளில் ஒன்றின் பெயர் சதாம். சாவி கொடுத்தால் அதன் தலையில் சுத்தியல் ஓங்கி அடிக்கும்.**

மாகச் சித்தரிக்கப் படுகிறது.

### பொய்யும் புனைச்சுருட்டுமே போர்ச் செய்திகள்!

இன்னும் ஏகாதிபத்தியங்கள் பரப்பும் பொய்களும் வதந்திகளும் கூட செய்தியாக் கப் படுகிறது. போர் துவங்கும் முன்பு 6 ஈராக் ராணுவ ஹெலிகாப்டர்கள் சௌதி அரேபியா மீது பறந்தன. அதிலிருந்த ஈராக்கிய வீரர்கள் அமெரிக்கப் படையிடம் சரணடைந்தனர்; அரசியல் தஞ்சம் கோரினர் என்ற பொய்ச் செய்தி அமெரிக்காவினால் உலகெங்கும் பரப்பப்பட்டது. ஈராக்கின் மனஉறுதியைக் குலைக்க அமெரிக்க செய்த தந்திரமே இது என்று பின்னர் அம்பலமாகியது. இதை எதிர்த்து அமெரிக்க பத்திரிக்கையாளர்களே கண்டனம் தெரிவித்ததோடு, தாங்கள் அனுப்பும் உண்மைச் செய்திகளை ராணுவம் கடுமையாக தணிக்கை செய்வதாக குற்றம் சாட்டினர். ஆனாலும், "தணிக்கை, பொய்ப் பிரச்சாரம் எல்லாம், எல்லா போர்களிலும் எல்லா நாட்டிலும் சகஜமானதுதான்" என்று அமெரிக்கா தனது செயலை நியாயப்படுத்தியது. இப்படி பொய்யைப் பரப்பிய அமெரிக்காவுக்கு பின்னர் அதுவே பேரிடியாக அமைந்தது. சௌதி அரேபியாவில் உள்ள அல் காஃப்ஜி நகரை ஈராக்கிய படைகள் கைப்பற்றிய போது, அவர்கள் சரணடையத்தான் வருகிறார்கள் என்று அமெரிக்கப் படையினர் ஏமாந்து போனார்களாம்! இதேபோல, இப்போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டோம் என்று அமெரிக்கா புளுகியது. ஆனால் ரகசியமாக அணு ஆயுதங்கள் குவிக்கப் படுவதாக செய்தி கசியத் தொடங்கியதும், ஈராக் ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தினால் நாங்கள் அணு ஆயுதங்களை ஏவுவதைத் தவிர வேறு வழியில்லை என்று இப்போது நாடகமாடுகிறது.

மாபெரும் ஜனநாயகவாதிகளாக தங்களை மார்தட்டிக் கொள்ளும் ஏகாதிபத்தியங்கள், இப்போருக்கு எதிராக உலகெங்கும் மக்கள் நடத்திவரும் ஆர்ப்பாட்டச் செய்திகளை திட்டமிட்டே இருட்டடிப்பு செய்கின்றன. சமாதானத்துக்காக இன்னுமொரு முயற்சி செய்யுமாறு விடுத்த கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு, போர் ஒன்றுதான் ஒரே தீர்வு என்று வெறியூட்டும் வகையில் ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றன. இவற்றை அப்படியே வாந்தி எடுக்கும் இந்தியப் பத்திரிக்கைகள், ஈராக்கின் செய்தி நிறுவனங்கள் தரும் தகவல்களை மருந்துக்குக் கூட வெளியிடுவதில்லை. ஏகாதிபத்திய நிறுவனங்கள் தரும் செய்திகளை பக்கம் பக்கமாக வெளியிடும் இப்பத்திரிக்கைகள் கடைசி வரியில் ஈராக் இதை மறுத்தது என்று எழுதுவதற்கு மேல் வேறொன்றும் சொல்வதில்லை.

இதே வகையில், வளைகுடாப் போரின் அமெரிக்கப் படைத் தளபதி ஷெவார்ஸ் காஃப்பை வீரபராக்கிரம அதிசய மனிதராக செயற்கையாக ஏகாதிபத்தியங்கள் பெருமைப்படுத்தியதை அப்படியே இந்திய - தமிழகப் பத்திரிக்கைகள் வெளியிட்டன. அமெரிக்க 'மாமா' புஷ் இப்போரைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிராமல் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையில் உல்லாச ஓய்வு, பொழுது போக்குகளில் ஈடுபடுவதாகவும், அதேசமயம் சதாம் உசேன் பாதாள மாளிகையில் பதுங்கிக் கொண்டு போர்வெறி பிடித்து அலைவதைப் போலவும் உலக மக்களை மூளைச் சலவை செய்யும் வகையில் தொடர்ந்து பிரச்சாரம் செய்யப்படுகிறது.

ஆதிக்க வெறிபிடித்த ஏகாதிபத்தியங்கள் தமது ராணுவ பலத்தை மட்டும் எப்போதும் நம்பிக் கொண்டிருப்பதில்லை. பொய்கள், வதந்தி, அவதூறு, போர்வெறி, இன வெறியை அவை சிந்தனை ரீதியில் பரப்பி ஆதாயமடைவதையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளன. ஆக்கிரமிப்பாளன் ஈராக்குக்கும் ஆதிக்க வெறியன் அமெரிக்காவுக்கும் எதிராகப் போராடி வரும் உழைக்கும் மக்கள், ஏகாதிபத்தியங்களின் அவதூறு, பொய்ப் பிரச்சாரங்களை விழிப்புடனிருந்து அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டிய தருணமிது.

● குமார்

---

# வளைகுடா போருக்கு எதிராக....

● உலக மேலாதிக்க வெறியன் அமெரிக்காவே வளைகுடாவை விட்டு வெளியேறு!

● பிராந்திய ஆதிக்க வெறியன் ஈராக்கே குவைத்தை விட்டு வெளியேறு!

● குவைத் நிலை பற்றி தீர்மானிக்கும் உரிமை குவைத் மக்களுக்கு மட்டுமே உண்டு!

● உலக மக்களே! உழைக்கும் மக்களே! ஒன்றுபடுவோம், யுத்தவெறியர்களை முடியடிப்போம்!

— முதலான முழக்கங்களை முன் வைத்து மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி போன்ற புரட்சிகர அமைப்புகள் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தையும், சுவரொட்டி, தட்டி பிரச்சாரத்தையும் தமிழகமெங்கும் நடத்தி வருகின்றன.

மதுரையில் ம.க.இ.க.சார்பாக 24.1.91 அன்று காலை ஆதிக்க வெறியன் புஷ் மற்றும் ஆக்கிரமிப்பாளன் சதாம் உசேன் ஆகியோரின் கொடும்பாவி கொளுத்த தீர்மானிக்கப்பட்டது. முதல் நாளே தட்டிகள், சுவரொட்டிகள் மூலம் நகரெங்கும் பிரச்சாரம் செய்யப்பட்டது. 24ந்தேதி மக்கள் நெருக்கம் மிகுந்த பெரியார் பேருந்து நிலையம் முன்பாக எழுச்சிகரமான முழக்கங்களுடன் தோழர் பன்னீர் செல்வம் தலைமையில் கொடும்பாவிகள் கொளுத்தப்பட்டது.

உசிலை வட்டார வி.வி.மு. சார்பாக 26.1.91 அன்று காலை உசிலை மலையாண்டி தியேட்டரிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு 4 முக்கிய வீதிகளின் வழியாக சென்று உசிலை பேருந்து நிலையத்தை அடைந்து அங்கு புஷ் மற்றும் சதாம் உசேனின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன. தோழர் குருசாமி ஊர்வலத்திற்கு தலைமை தாங்க பெண்கள் உட்பட சுமார் 50 பேர் கலந்து கொண்டனர். தோழர் கே.பி.ராமசாமி உரைக்குப் பின் கொடும்பாவிகள் கொளுத்தப்பட்டது. 400க்கும் மேற்பட்ட மக்கள் கூடி ஆதரவளித்தனர்.

### திருக்காட்டுப்பள்ளி

திருவையாறு வட்டார வி.வி.மு. - சார்பாக ஆதிக்கவெறியின் அமெரிக்காவையும் ஆக்கிரமிப்பாளன் ஈராக்கையும் அம்பலப்படுத்தி, இப்போரை எதிர்க்க உழைக்கும் மக்கள் அணிதிரளும்படி கேட்டு தட்டி பிரச்சாரம் திருக்காட்டுப்பள்ளியில் மேற்கொள்ளப்பட்டது.



www.padippakam.com

**விடுதலைப் புலிகள் குறித்த புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாட்டை விமர்சித்தும், கேள்விகள் எழுப்பியும் அவர்களை ஆதரிக்கும் மாற்றுக் குழுக்களின் சில தோழர்கள் எழுதியுள்ளனர். அவர்கள் நமது தோழர்களிடம் எழுப்பும் கேள்விகளையும் அனுப்பியுள்ளனர். அவற்றைத் தொகுத்து இங்கே பதிலளிக்கிறோம்.**

● ***விடுதலைப் புலிகள் போதைப் பொருளும், ஆயுதங்களும் கடத்துவதில் ஈடுபட்டிருப்பதாகக் கூறுவதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? "சோ" போன்ற ஈழ விடுதலை எதிரிகளின் அவதூறுப் பிரச்சாரம் போன்றதுதான் "பு.ஜ." செய்வதும் ஆகும் என்று முன்னாள் எம்.சி.பி.ஐ. - இன்னாள் தமிழக தேசியப் பொதுவுடமைக் கழகத் தலைவர் மணியரசன் முதல் முன்னோடி, சமரன் குழுவினர் பலர் கூறுகின்றனர்.***

★ ஈ.பி.ஆர்.எல்.எஃப்., பிளாட், டெலோ போன்ற ஈழ துரோகக் குழுக்களைச் சேராதவர்களும், இன்னமும் இந்திய ஆதிக்க ஆக்கிரமிப்பையும், சிங்கள இன ஒடுக்குமுறையையும் எதிர்த்து ஈழ சுயநிர்ணய உரிமைக்குப் போராடும் பல்வேறு சிறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும், விடுதலைப் புலிகள் அமைப்பின் பாசிசத்துக்கு எதிராக வெளியேறியவர்களும் ஆகிய இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வாழும் ஈழத் தமிழ்ப் போராளிகள் கொடுத்த தகவல்கள் அடிப்படையில்தான் புலிகள் மீதான மேற்கண்ட கருத்து எழுதப்பட்டது. இதை அம்பலப்படுத்தியதற்காக "புதிய ஜனநாயகத்"திற்கு எதிராக அவதூறு செய்யும் புலிகளின் ஆதரவு அமைப்புத் தலைவர்களிடமே நேரில் பல ஈழப் போராளிகள் இதைத் தெரிவித்துள்ளனர். புலிகளின் பாசிசத்துக்குத் துணைபோவது என்ற அரசியலின் காரணமாக இந்த உண்மையை அத் தலைவர்கள் மூடி மறைக்கிறார்கள்.

"சோ" போன்றவர் எழுதுவதும் "புதிய ஜனநாயகத்தின்" நிலைப்பாடும் ஒன்றுதான் என்பது இன்னொரு தந்திரமான அவதூறு. கடந்த ஆண்டு சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பத்மநாபா உட்பட 16 பேர் புலிகளால் கொல்லப் பட்டனர். அப்போது கருணாநிதி முதற்கொண்டு புலிகளின் மிகவும் நம்பகமான பிரதிநிதிகளாகிய நெடுமாறன், வீரமணி வரை அவர்கள் அனைவரும் இதைப் புலிகள் செய்யவில்லை; டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஒரு குழு தான் செய்தது என்று புளுகினர். காங்கிரசு - அ.தி.மு.க; ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரத்தைக் கண்டஞ்சியும், உண்மையைச் சொன்னால் தமிழக மக்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்றஞ்சியும் மழுப்பினர். புலிகள் ஆதரவு சவடால் அடிக்கும் "புரட்சிக்காரர்கள்" கூட வாய்மூடிக் கிடந்தனர். ஆனால் "புதிய ஜனநாயகம்" என்ன எழுதியது? புலிகள் தான் பத்மநாபா முதலிய ஈழத் துரோகிகளை அழித்தொழித்தனர்; ஆனால் அதில் ஒன்றும் தவறில்லை; அவர்களது துரோகத்துக்குத் தரப்பட்ட தண்டனைதான் என்று எழுதியது. அதேசமயம் உண்மையான பல ஈழப் போராளிகளையும், ராஜினி திராணகம போன்ற ஜனநாயகவாதிகளையும் சமூக விரோதிகள் என்று முத்திரை குத்தியும் இரகசியமாகவும் பாசிசப் புலிகள் படுகொலை செய்வதைச் சுட்டிக்காட்டி விமர்சனப்படுத்தியது.




அப்போது பத்மநாபாவைக் கொன்றது புலிகள் தாமென்று "சோ" போன்றவர்களும்தான் எழுதினார்கள். அதற்காக அவர்களது நிலைப்பாடும், "புதிய ஜனநாயக"த்தின் நிலைப்பாடும் ஒன்றுதானெனக் கூறிவிட முடியுமா? இதேபோல தி.மு.க.,வி.பி.சிங் ஆட்சிகளை எதிர்த்தும், சாராயம் - போதை மருந்து, ஆபாச சினிமா போன்றவற்றை எதிர்த்தும் "சோ" போன்றவர்கள் கூட எழுதுகிறார்கள். அதற்காக இவற்றை எதிர்ப்பதில் "புதிய ஜனநாயக"மும் அவர்களும் ஒன்றுபடுகிறார்களா? இந்திய ஆதிக்க - ஆக்கிரமிப்பு - விரிவாக்கம், சிங்களப் பேரின ஒடுக்குமுறை, ஈழத் துரோகிகள் ஆகியோரை எதிர்த்து ஈழ சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் அதே சமயம், புலிகளின் பாசிசத்தையும், "புதிய ஜனநாயகம்" எதிர்க்கிறது. ஆனால் இந்திய ஆதிக்கம் - ஆக்கிரமிப்பு - விரிவாக்கம், சிங்களப் பேரின ஒடுக்குமுறை, ஈழத் துரோகி ஆகியோரை ஆதரித்து, ஈழ சுய நிர்ணய உரிமையை எதிர்ப்பதில் "சோ" போன்றவர்களுக்கு புலிகளின் பாசிச நடவடிக்கைகள் முகாந்திரமாகப் பயன்படுகின்றன. மேற்கண்ட நிலைப்பாடுகள் இரண்டும் எப்படி ஒன்றாகும்?

● ***'தேசிய இன விடுதலை யுத்தத்'தில் புலிகள் மட்டுமே ஊன்றி நிற்கிறார்கள். அப்படியிருக்கும்போது புலிகளை ஆதரிக்கவில்லை என்றால் ஈழ விடுதலை இயக்கத்தையே எதிர்ப்பதாகாதா? ஈழ விடுதலைக்காக வேறு எந்த அமைப்பு போராடும் நிலையில் இருக்கிறது? அவர்களும் இல்லை என்றால் சிங்கள இராணுவ வெறியாட்டத்திற்கு எதிராக ஈழத் தமிழர்களுக்கு யார் தான் பாதுகாப்பு?***

★ "தேசிய இன விடுதலை யுத்தத்தில் புலிகள் மட்டுமே ஊன்றி நிற்கிறார்கள்" என்பது அப்பட்டமான பொய் - இரண்டு வகையில். முதலாவதாக, அதற்காக ஊன்றி நின்ற குழுக்களுக்கு, அவை சிறியவையானாலும், தடைவிதித்து, அவற்றிலிருந்த போராளிகளைப் புலிகள் கொன்றதன் மூலமே "புலிகள் மட்டுமே" என்கிற நிலைமை உருவாக்கப்பட்டது.!

. இரண்டாவதாக, 'இந்தக் காரியத்தைச் செய்ததன் மூலம் "தேசிய இன விடுதலை" யுத்தத்தில் பலவீனத்தை ஏற்படுத்தி சிங்களப் பேரின ஒடுக்குமுறைக்கு மறைமுகமாகத் துணைபோனார்கள், புலிகள்.

சக போராளிகளைக் கொன்றதன் மூலம் போரில் ஊன்றி நிற்பவர்கள் புலிகள்தான் என்பதும், அதுவே புலிகளின் பலம் என்று சொல்வதும் (பார்க்க சமரன் வெளியீடு) எவ்வளவு கொடூரமும் வக்கிரமும் நிறைந்தது என்பதை எண்ணிப் பாருங்கள்.

அடுத்து, தேசிய இன விடுதலை யுத்தத்தில் புலிகள் ஊன்றி நிற்பதாகக் கூறுவதும் அப்பட்டமான பொய். புலிகள் போடும் சொந்த குழு ஆதாயத்துக்கான நிபந்தனைகளை இந்திய, இலங்கை ஆட்சியாளர்கள் ஏற்கவில்லையே தவிர, மற்றபடி அவை ஏற்கப்படுமானால் தேசிய இன விடுதலைக்குத் துரோகமிழைக்கப் புலிகள் எப்போதுமே தயார்தான்! புலிகளின் வாக்குமூலப்படியே இந்திய உளவுப்படையான "ரா"விடம் இயக்கத்தை காட்டிக் கொடுப்பதில் மற்ற ஈழத் துரோகி அமைப்புகளுடன் புலிகளும் கலந்து கொண்டனர். ஈழ விடுதலை இயக்கத்தார் மீது பலவீனம் ஏற்படும் வகையில் "ரா"வின் போதனைகளைக் கேட்டு சிங்கள சிவிலியன் மக்களைக் கொன்றனர்; சக போராளிகளைக் கொன்றனர். ஈழ தேசிய இன விடுதலை - சுய நிர்ணய உரிமையைக் கைவிட்டு, தமது குழு உறுப்பினர்களின் சொந்த வாழ்க்கைக்காக ஈட்டுத்தொகை பேரம் நடத்தி, பலகோடி ரூபாய்க்கு எதிரிகளிடம் ஒப்பந்தம் போட்டு, முதல் தவணை கையூட்டும் பெற்றனர். இதுபோன்றதொரு பேரத்துக்குப் புலிகள் எப்போதுமே தயார் என்ற நிலையில் இன விடுதலை யுத்தத்திற்கு அவர்கள் ஊன்றி நிற்பதாக எப்படி ஏற்பது? இந்த விவரங்களை எல்லாம் மூடி மறைத்து விட்டுத்தான் மேற்படிக் கேள்விகள் எழுப்புபவர்கள் பிரசுரம் போடுகிறார்கள்.

● ***ஈழத்தின் "சுயநிர்ணய உரிமையை" அங்கீகரிப்பதாக கூறுகிறீர்கள். அதற்காக போரில் ஈடுபட்டுள்ள புலிகளை நிபந்தனையுடன் கூட ஆதரிப்பதில்லை. இது விநோதமான, முரண்பாடான நிலைபாடில்லையா?***

★ இல்லை. இதில் விநோதமும் இல்லை. முரண்பாடும் இல்லை. ஈழத் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையைத் தான் நாம் ஆதரிக்கிறோம். ஈழத் தமிழினம் என்பது பாசிசப் புலிகளை மட்டுமே குறிக்காது. சுயநிர்ணய உரிமை என்பது அந்த இனத்துக்கான ஜனநாயகக் கோரிக்கை. அது பாசிச அமைப்பும் அதன் தலைமையும் தீர்மானிக்



படிப்பகம்

www.padippakam.com

கும் உரிமை என்றாகிவிட்டால் அப்புறம் ஜனநாயகம், இனத்தின் உரிமை என்பது வெறும் கேலிக்கூத்தாகவே இருக்கும்! ஆகவே அந்த தேசிய இனமக்களின் ஜனநாயக பூர்வமான சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் அமைப்புகள் எவ்வளவு சிறியதானாலும், அல்லது அதற்கான தன்னெழுச்சியான மக்களது போராட்டங்களையும் கூட ஆதரிப்பது; அவ்வாறான அமைப்புகள் இல்லையானால் அவற்றை உருவாக்கவும், அதைவிட முக்கியமாக சுயநிர்ணய உரிமையைத் தனது புதிய ஜனநாயகப் புரட்சியின் திட்டத்தில் ஒரு அங்கமாகக் கொண்ட மார்க்சிய - லெனினியக் கட்சியை உருவாக்கவும் போராடுவதுதான் நமது கடமையாகும்.

● *புலிகளுக்கு மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம் பொருளாதார உதவி செய்தது பற்றிய கேள்விக்கு புதிய ஜனநாயகம் அளித்த பதில் நடைமுறைக்குப் பொருத்தமற்றது. புலிகளின் பாசிசத்தை முதலில் கண்டுபிடித்தது 'ம.ஜ.இ.க.'வா, 'பு.ஜ.'வா என்பது கேள்வியுமல்ல. அது பிரச்சினையுமல்ல. புலிகள் பாசிசக் கொள்கையுடையவர்களாய் இருந்தாலும் 'தேசிய இன விடுதலை' யுத்தத்தில் ஊன்றி நிற்கும்வரை அனைத்து புரட்சியாளர்களும் ஜனநாயக சக்திகளும் விடுதலைப் போராட்டத்தில் புலிகளின் அமைப்புடன் ஒன்றுபடவேண்டும். ஜனநாயகத்துக்காக அதனுடன் போராட வேண்டும் எனும் நிபந்தனையுடன் ஒரு நிலைப்பாடு எடுத்து மக்களிடையே ம.ஜ.இ.க. பிரச்சாரம் செய்து வருகிறது! இது எந்த வகையில் தவறு? இந்தியாவின் ஈழ ஆக்கிரமிப்பின் போது அதை எதிர்த்து புலிகளை ஆதரிப்பதாக பு.ஜ. எழுதியது. ம.ஜ.இ.க.வின் நிலைப்பாடு தவறென்றால் அன்றைக்கு 'பு.ஜ.' நிலைபாடும் தவறுதானே!*

*— கே.குமார், சென்னை.*

ஈழத் தமிழினம் என்பது பாசிசப் புலிகளை மட்டுமே குறிக்காது. சுய நிர்ணய உரிமை என்பது அந்த இனத்துக்கான ஜனநாயகக் கோரிக்கை. அது பாசிச அமைப்பும் அதன் தலைமையும் தீர்மானிக்கும் உரிமை என்றாகிவிட்டால் அப்புறம் ஜனநாயகம், இனத்தின் உரிமை என்பது வெறும் கேலிக் கூத்தாகவே இருக்கும்.

சக போராளிகளைக் கொன்றதன் மூலம் போரில் ஊன்றி நிற்பவர்கள் புலிகள்தான் என்பதும், அதுவே புலிகளின் பலம் என்று சொல்வதும் (பார்க்க : சமரன் வெளியீடு) எவ்வளவு கொடூரமும், வக்கிரமும் நிறைந்தது என்பதை எண்ணிப் பாருங்கள்.

★ ம.ஜ.இ.க.வின் நிலைப்பாடென்று இங்கே வாசகர் கூறுவதை மேற்கோள் காட்டிப் பின்வருமாறு ''பு.ஜ.''வில் எழுதியிருந்தோம். ''இந்தக் கொள்கை இதுவரை எந்தக் குழுவும் பின்பற்றாதது போலவும், பின்பற்றியிருந்தால் அக்குழுக்கள் புலிகளுடன் சரியான உறவுகளை ஏற்படுத்தியிருக்கலாம் என்பது போலவும் (ம.ஜ.இ.க.வினர்) எழுதுகின்றனர்; இதன்மூலமும், இந்தக் கொள்கையைப் பின்பற்றிய குழுக்களுக்கு என்ன நேர்ந்ததென்ற படிப்பினையைக் குருட்டுத்தனமாக மறுப்பதன் மூலமும் பாசிசப் பிரபாகரன் கும்பலுக்கு ம.ஜ.இ.க. வக்காலத்து வாங்குகிறது. கடைசியாக தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை உட்பட ம.ஜ.இ.க. வினர் கூறும் கொள்கையைப் பின்பற்றிய அமைப்புகள் கூட புலிகளின் பாசிசத்திற்குப் பலியானதுதான் அனுபவம். இதை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் நிறையவே உள்ளன.

பாசிசப் புலிகளுக்கு வக்காலத்து வாங்குவது மட்டுமல்ல; புலிகளைத் தவிர அனைத்துத் தமிழீழப் போராளி அமைப்புகளும் தமது சொந்த அழிவுக்கான முழக்கத்தையே கொள்கையாகக் கொள்ள வேண்டும் என்கிறது ம.ஜ.இ.க''

ம.ஜ.இ.கவின் கொள்கை முழக்கமானது புலிகள் தவிர மற்ற அமைப்புகளின் சொந்த அழிவுக்கானதுதான் என அவற்றுக்கு ஏற்கனவே நேர்ந்த அனுபவம் படிப்பினை என்பதை பு.ஜ. குறிப்பிட்டுள்ளவாறே குருட்டுத்தனமாக ம.ஜ.இ.க.வினர் மறுக்கின்றனர்; இதை மீண்டும் ஒருமுறை உறுதி செய்வதாக ம.ஜ.இ.க.வின் நிலைப்பாடு எந்த வகையில் தவறென்று வாசகர் கேட்கிறார். கடைசியாக கிடைத்துள்ள தகவலின்படி, ம.ஜ.இ.க.வின் மேற்கண்ட கொள்கையைப் பின்பற்றி வந்த ''ஈரோஸ்'' அமைப்பைக் கலைத்துவிட்டு, புலிகளுடன் சேரும்படி நிர்பந்தித்தனர்; ஈரோஸ் மறுத்துவிடவே அந்த அமைப்பும் தடைசெய்யப்பட்டு, பாலகுமாரன் உட்பட அதன் தலைவர்கள் புலிகளின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது அதிகார பூர்வமற்ற முறையில் தெரிகிறது. ஆகவே ஜனநாயகத்துக்காகப் புலிகளுடன் போராடுவது என்பது போராளிகளின் தற்கொலைக்கான பாதையே! அதுசரி. ம.ஜ.இ.க.வின் இந்த நிலைப்பாட்டில் புலிகளுக்கு ஆதரவு என்பதைத்தவிர, ஜனநாயகத்துக்கான போராட்டம் என்னென்ன நடத்தினார்கள் என்று சொல்வார்களா, விரல் விடக் காத்திருக்கிறோம்! சிங்களப் பேரின ஒடுக்குமுறை மற்றும் இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு போராட்டங்களில் உறுதியாக இருந்த போராளிகளும், ராஜினி திராணகம போன்றவரும் புலிகளால் கொல்லப்பட்டபோது கூட ம.ஜ.இ.க.வினர் மூச்சு விட்டதாகத் தெரியவில்லையே! ஒருவேளை புலிகளுடன் இதுபற்றி நேரிலே பேசிப் போராடி வருகிறார்களோ? அப்படியும் தெரியவில்லையே!

இப்போது ஒன்று நினைவுக்கு வருகிறது. சீனாவில் அரசையும், கட்சியையும் தெங் கும்பல் கைப்பற்றி, முதலாளித்துவத்தை நிலைநாட்டிய பிறகும்கூட (1982) இவர்கள் என்ன எழுதிக் கொண்டிருந்தார்கள் தெரியுமா? 'தெங் தலைமையைப் பற்றி அதிகப்பிரசங்கித்தனமாக முதலாளித்துவம், திரிபுவாதம் என்று சிலர் சாடுகின்றனர். அது தவறானது! தோழமை ரீதியாக விமர்சிக்க வேண்டும்! அதுதான் குருச்சேவிடம் மாவோ கடைப்பிடித்த அணுகுமுறை!' ஒருவேளை தெங்கிடம் கடைபிடித்த இதே அணுகுமுறையைத் தான் புலிகளிடமும் கடைப்பிடிக்கிறார்களோ! இப்போதும் கூட சென்னையில் நடந்த புலிகள் ஆதரவு அரங்கக் கூட்டத்தில் ஜனநாயகத்துக்காகப் போராட முயன்ற ம.ஜ.இ.க.வினர் வாயடைக்கப்பட்டதை எண்ணுவார்களா?

''புலிகளின் பாசிசத்தை முதலில் கண்டுபிடித்தது; ம.ஜ.இ.க.வா, பு.ஜ.வா என்பது கேள்வியுமல்ல, அது பிரச்சினையுமல்ல'' என்று வாசகர் ஒதுக்கி விடுவதும் ஏற்கக் கூடியதல்ல. முதலில் கண்டுபிடித்தது பெருமைக்குரிய விஷயமாகக் கருதி பு.ஜ. அவ்வாறு எழுதவில்லை. இட்லரின் பாசிச வளர்ச்சியை முன்னமேயே கண்டுபிடித்து எச்சரித்து, ஆட்சியைப் பிடிப்பதை முறியடிப்பதற்கு பதில் சமூக ஜனநாயகத் திரிபுவாதக் கட்சிகள் மெத்தனமாக இருந்தன; அதன்மூலம் அது ஆட்சிக்கு வரவும் உதவினர் என்று ஸ்டாலினும் - திமித்ரோவும் அனுபவத்தைச் சொன்னார்கள். அதைப்போல புலிகளின் பாசிசத்தை உரிய காலத்தில் கண்டறிந்து, அம்பலப்படுத்திப் போராடுவது புரட்சியாளர்களின் கடமை; அதை செய்யத் தவறியதோடு, ஒருபுறம் புலிகளின் பாசிசத்தை அறிந்து ஒப்புக் கொண்டும் ம.ஜ.இ.க. துணை போகிறது என்பதைச் சுட்டிக்காட்டவே எழுதப்பட்டது.

இந்தியாவின் ஈழ ஆக்கிரமிப்புப் போரின் போதிருந்த நிலைமையும் இப்போது அங்குள்ள நிலைமையும் ஒன்றல்ல. அரசியல் சக்திகளின் சேர்க்கையில் பல வேறுபாடுகள் இருக்கின்றன. உதாரணமாக, இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு சக்திகளான சிங்கள, முஸ்லீம், தமிழ்ப் போராளி அமைப்புகளுடன் கூட ''இணைந்து'' போராட வேண்டிய நிர்பந்தம் புலிகளுக்கு இருந்தது; அந்நிலைமையை அவர்களும் அங்கீகரித்தனர்; அப்போதும் பாசிசப் போக்குகளை முற்றாகப் புலிகள் கைவிடவில்லை என்றாலும் அவற்றின் அளவிலும் தன்மையிலும் மாறுபாடு இருந்தது. இந்தியாவின் ஈழ ஆக்கிரமிப்புப் போரில் புலிகள் வெற்றி பெற்றதானது அவர்களின் பாசிசப் போக்குகளை உறுதிப்படுத்தியுள்ளது என்பதை மறுக்க முடியாது. ஆகவே, அன்றைய நிலையில் நிபந்தனையுடன் புலிகளை ஆதரிப்பது என்ற பு.ஜ.வின் நிலைப்பாடும், இப்போது புலிகளின் பாசிசத்திற்குத் துணைபோகும் ம.ஜ.இ.க.வின் நிலைப்பாடும் ஒன்றல்ல. அப்போது செயலிழந்து, வாய்மூடி நின்றிருந்த ம.ஜ.இ.க.வினர் இப்போது உள்நாட்டு அரசியல் சித்தாந்தப் பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க முடியாமல்தான் புலிகள் ஆதரவுக் கூச்சல் போடுகிறார்கள் என்பதும் இன்னொரு உண்மையாகும்.

படிப்பகம்

# கொலைகார அரசு விளைவித்த கோரம்

இவருக்கு 34 வயது என்றால் யாரும் நம்பமாட்டார்கள். ஆனால், உண்மை அதுதான்!

ஏக்கம், தாகம்... எத்தனை உணர்ச்சிகள் எதிர்பார்ப்புகள் இந்த கண்களில்?

வாழ்க்கையே சூன்யமாய், தனிமையாய், அவமானமாய், கனவாய்.. இப்படியும் ஒரு சித்திரவதையா?

'கிரிட்டினிசம்' நோய் என்று சொல்லிவிட்டார் மருத்துவர்!

யாருக்குத்தான் தெரியும் இது நோயென்று? முற்பிறவியில் செய்த பாவம் என்றல்லவா நினைக்கிறார்கள் உற்றாரும் சுற்றாரும்! கல்யாண காட்சியிலிருந்து கடை கண்ணிவரை ஒதுக்கித்தானே வைக்கிறார்கள்! பிறரது ஏளனப் பார்வையும், அலட்சியப் பேச்சும், ஏசலும், கிண்டலும், கேலியும்தானே இதுவரை இவருக்கு கிடைத்த அனுபவங்கள்?!

எப்படி நேர்ந்தது இது? இயற்கையாகவா? பிறவியிலேயேவா?

இல்லை, செயற்கையாக... அணுக்கதிர் தாக்கியதால் விளைந்த நோய்!

கேரளா கொச்சியருகே ஆலவாய் பகுதி! அணு உலைக்குத் தேவையான கச்சாப் பொருளை ஐ.ஆர்.இ.(INDIAN RARE EARTH'S) எனும் அரசு நிறுவனம் வெட்டி எடுத்து சுத்திகரிக்கிறது. வெட்டியெடுத்த சுரங்களில் கழிவுகளை - கதிரியக்கம் கொண்ட ரசாயனப் பொருட்களை - இட்டு மூடுகிறது. இவற்றிலிருந்து அணுக்கதிர் பரவி நிலத்தடி நீரிலும் பின்னர் அருகே உள்ள பெரியார் ஆற்றிலும் கலக்கிறது.

கேரள கடற்கரையோரக் கிராமத்தில் பிறந்த இப்பெண்மணிக்கு மட்டுமல்ல, இந்நீரைப் பயன்படுத்திய பலருக்கும் இந்நோய்! சுற்றுவட்டார கிராமங்களில் கூன், குருடு, செவிடு, நொண்டி, குள்ளம்... என கோரமாக பிறப்பது அதிகரித்து வருகிறது. ஐ.ஆர்.இ. தொழிலாளர்கள் உட்பட எண்ணற்றவர்களுக்குப் புற்றுநோய்! இத்தனையும் மனித உயிரணுக்களை அணுக்கதிர் தாக்குவதால் விளைபவை!

இந்நிலை இப்பெண்மணியோடு நின்று விடும் பிரச்சினையல்ல, தலைமுறை தலைமுறையாக சந்ததியினருக்கும் தொடர்கிறது. தாய்மார்களின் வயிற்றிலிருக்கும் கருவைத் தாக்கி பிறக்கும் பிஞ்சுக் குழந்தைகளும் இப்படி கோரமாக பிறப்பதே அதிகம்!

நமது உடல் ஒன்று அல்லது இரண்டு மில்லிரெம் அளவுள்ள அணுக்கதிரை மட்டுமே அனுமதிக்கும்; ஆனால், அணு உலைகள் 1600 முதல் 1700 மில்லி ரெம் வரை கதிரியக்கத்தை வெளியிடுகின்றன.

கல்பாக்கம் அணு உலை 1988-ம் வருடம் மட்டும் 30,000 மில்லிரெம்மை தொட்டது! இதனால் 13 தொழிலாளர்களும், அவர்கள் குடும்பத்தினர் 14 பேரும் இறந்தனர்.


தாராப்பூர் அணு உலைக் கசிவால் ஒருமுறை 2 இன்ஜினியர்கள் இறந்தனர். 300க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டனர்.

அணு உலையிலிருந்து வெளியேறும் 'கிரிப்டான்' போன்ற கதிரியக்க வாயுக்கள் மனிதர்களை மட்டுமல்ல விலங்குகளை, தாவரங்களையும் தாக்கி மையமான உயிரணுக்களையே அழிக்கின்றன. சுற்றுப்புறச் சூழலை - கீழ் காற்றை மாசுபடுத்துவதோடு நீர்நிலைகளிலும் கரைந்து நீரை நஞ்சாக்குகின்றன. பூமியில் ஜீவராசிகள் வாழ்வதையே கேள்விக்குள்ளாக்குகின்றன.

"மேலை நாடுகளில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்புகள் அனைத்தையும் (நவீன தொழில் நுட்பத்தையும்) கொண்டே அணுக்கதிர் வீச்சைக் கட்டுப்படுத்துகிறோம்" என்று பட்டியலிடுகிறார்கள் ஆட்சியாளர்கள்.


என்னதான் தலைகீழாக நின்றாலும் அணுஉலை இருந்தாலும், இயங்கினாலும், இயங்காவிட்டாலும், மூடினாலும் சரி ஆபத்தை தவிர்க்க முடியாது என்றார்கள் விஞ்ஞானிகள்! பூமிக்கடியிலும் கடலுக்கடியிலும் புதைக்கப்படும் அணு உலைக் கழிவுத் தொட்டிகளின் சுவர் 16 முதல் 20 வருடங்கள் வரையே அணுக்கதிர் வீச்சை கட்டுப்படுத்த முடிகிறது என்று கண்டுபிடித்துள்ளார்கள் ஆய்வாளர்கள்!

அணுக்கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறைந்தபட்சம்



www.padippakam.com

படிப்பகம்



இப்பெண்மணியைப் போன்ற ஏழைக் குடும்பத்தினர் என்ன செய்வார்கள்?

மிஞ்சி மிஞ்சிப் போனால் உள்ளூர் வைத்தியர் அல்லது நகராட்சி ஆஸ்பத்திரியைத்தானே அண்ட முடியும்? அதுவும் இல்லையென்றால் ஊள்ளூர் சாமியார், மாந்திரீக பாட்டி, வேப்பிலை... இதுதானே கதி!

2000-ம் வருடத்திற்குள் 10,000 மெகாவாட் அளவு அணுமின்சாரத்தை உற்பத்தி செய்து இந்தியாவையே ஒளிமயமாக்கி வருவதாக 5 ஆண்டுகளுக்கு முன்பு குளுரைத்தார் பாசிச ராஜீவ்! ஆனால், உண்மை என்ன?

அணுஉலைக் கழிவிலிருந்து அணுகுண்டு தயாரிப்பதற்குரிய புளுட்டோனியம் கிடைக்கிறது என்பதால் அந்நிய ஏகாதிபத்தியங்கள் உதவியோடு அணுமின் திட்டத்தை விரிவுபடுத்தினார்.

இத்திட்டத்திற்கு தங்கள் நாட்டில் எதிர்ப்பு வந்ததால் ஏகாதிபத்தியங்கள் இந்தியா போன்ற நாடுகளில் அணுமின் உலை தொடங்குவதற்கு அனைத்தும் கொடுத்து புளுட்டோனியத்தை எடுத்துச் செல்கின்றன.

ராஜீவ் ஆனாலும் சரி, ராஜாவானாலும் சரி, எடுபிடி சந்திரசேகர் ஆனாலும் சரி... எந்த ஆட்சியும் இதை மூடி மறைத்து வெறியோடு அணுஉலையை திணிக்கின்றன. அணு உலையில் கிடைக்கும் சிறிய அளவு மின்சாரத்தைக் காட்டி அனைத்தையும் மறக்கடிக்கிறார்கள்!

ஆனாலும், இவற்றை அம்பலப்படுத்தி எதிர்ப்பு போராட்டங்கள் இந்தியாவில் என்றோ தொடங்கப்பட்டுவிட்டது! நரோரா, கெய்கா, இடுக்கி, கூடங்குளம் அணு உலை எதிர்ப்பியக்கங்கள் தொடர்கின்றன, வளர்கின்றன. இப்பெண்மணியைப்போல் நாமும் பிறரும் பாதிக்கப்படுவதற்கு முன் நமது போராட்டக் கரங்களை உயர்த்துவோம்!

● ராசு.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்க ஆக்கிரமிப்பு போருக்கு பின்புலமாக இந்தியா!

**இலைமறைவு காய் மறைவாகச் செய்து கொண்டிருந்த ஏகாதிபத்திய அடிவருடித் தனத்தை இப்போது பகிரங்கமாகவே செய்யத் துணிந்துவிட்டது, இந்திய அரசு. ஈழ விடுதலைப் போராளிகள் இங்கே தஞ்சம் புகவே கூடாது; தேசத்துக்கு ஆபத்து என்று அவதூறு கிளப்பி அடக்கி ஒடுக்கும் இந்திய அரசு, இந்திய நாட்டையே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புப் போருக்கு பின்புலமாக்கி விட்டது.**

இப்போதைய வளைகுடாப் போரில் இந்தியா நடுநிலை வகிப்பதாகவும், போரை நிறுத்துவதற்காகத் தீவிர சமாதான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் இந்திய அரசு அதிகாரப் பூர்வமாக இன்னமும் கூறிக் கொள்கிறது. ஆனால், ஈராக்குக்கு எதிராக இரகசியமாகவும் மறைமுகமாகவும் போரில் அமெரிக்கத் தரப்பில் இந்தியா பங்கேற்பதாக பல உண்மைத் தகவல்கள் தெரிய வருகின்றன. வளைகுடாப் போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்க விமானங்களுக்கு பம்பாய் விமான நிலையத்தில் எரிபொருள் - பெட்ரோல் நிரப்பப்படுவதாக புதுதில்லிப் பத்திரிக்கையில் செய்தி வந்துள்ளது.

மத்தியிலுள்ள கிரிமினல் மாஃபியா கும்பலின் அரசின் பிரதான புளுகுணியும், பெட்ரோலிய அமைச்சருமான மாளவியா உடனே அச்செய்தியை அடியோடு மறுத்தார். அட்டவணைப் படியில்லாத எந்த விமானங்களுக்கும் எரிபொருள் நிரப்பப்படவில்லை. புதிய கட்டுப்பாடுகளுக்கு (ரேஷன் - வெட்டு) உட்பட்டு "சிவிலியன்" விமானங்களுக்கு மட்டுமே அவ்வாறு செய்யப்படுகிறது என்றார்.

பிறகு எரிபொருள் நிரப்பும் அமெரிக்க இராணுவ விமானப் படங்கள், அமெரிக்க இராணுவ விமானிகள் ஐந்து நட்சத்திர விடுதிகளில் தங்கும் செய்திகளை பம்பாய் நிருபர்கள் வெளியிட்டனர். மறுக்க முடியாத நிலையில், அமெரிக்கப் போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பவில்லை; மிகவும் அபாயகரமில்லாத - உயிர்க்கொல்லி ஆயுதங்கள் இல்லாத சரக்குகளான மருத்துவ சப்ளைகள், மருத்துவ, அவசர, மனிதாபிமானப் பணிகளுக்குப் போகும் ஊழியர்கள் மட்டுமே எடுத்துச் செல்லும் விமானங்களுக்கு மட்டுமே எரிபொருள் நிரப்பப்படுகிறது என்றது அரசு.

ஆனால், ஈராக் இந்தப் புளுகை ஏற்கத் தயாராக இல்லை. காஷ்மீர், வங்க தேசப் போர் ஆகிய விவகாரங்களில், பாகிஸ்தான் இசுலாமிய நாடென்றும் பாராமல் இந்தியாவை நீண்டகாலமாக ஆதரித்து வந்த ஈராக்குக்குத் துரோகம் செய்துவிட்டதாக ஆத்திரப்பட்டது. இந்தியா நடுநிலை தவறி, கூட்டுச்சேரா நாடான ஈராக்குக்கு எதிரான போரில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு உடந்தையாக மாறிவிட்டது என்று கடும் கண்டனம் தெரிவித்தது. அமெரிக்காவோ இந்திய உதவிக்கு நன்றி தெரிவித்ததோடு இரு நாட்டு நட்புறவு பலப்படுவதாகப் பாராட்டியது.

இதைத் தொடர்ந்து வந்த செய்திகள் மேலும் பல வகைகளில் அமெரிக்காவுக்கு உடந்தையாய் இந்தியா நடந்து கொள்வதை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தன. பம்பாயில் மட்டுமல்ல; சென்னை, ஆக்ராவிலும் அமெரிக்கப் போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பப்படுகின்றது. அதோடு பிலிப்பைன்சில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களில் இருந்து போர் விமானங்கள் இந்தியாவுக்கு மேலே பறந்துபோய் ஈராக்கைத் தாக்குவதற்கு விண்வெளிப்பாதையும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. ஈராக்மீது குண்டு மழைபொழிந்துவிட்டு, இந்திய விமான நிலையங்களுக்குத் திரும்பி வந்து மறுபடியும் எரிபொருள் நிரப்பிக் கொண்டு போய் ஈராக்கைத் தாக்கவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

விமானங்கள் மட்டுமல்ல; போர்க்கப்பல்களும் இந்தியத் துறைமுகங்களுக்கு வந்து எரிபொருள் நிரப்பிக் கொள்ளவும், பயிற்சி பெறவும் அனுமதிக்கப்பட்டு, இங்கு வந்துபோகின்றன. வளைகுடாப் போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினர் இந்தியாவின் நட்சத்திர விடுதிகளில் ஓய்வெடுக்கவும், காயப்படும் அமெரிக்கர்களுக்குச் சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

"நேரு - இந்தியா - ராஜீவ் உருவாக்கிய 40 ஆண்டுகால கூட்டுச் சேராக் கொள்கையை சந்திரசேகர் அரசு கைவிட்டு கேடு ஏற்படுத்தி விட்டது; இந்தச் சிறுபான்மை அரசுக்கு வெளிவிவகாரக் கொள்கையை மாற்றுவதற்கு உரிமை கிடையாது" என்று காங்கிரசு சாடியது. உடனடியாகக் கூடிய காங்கிரசு காரியக் கமிட்டி இதையே கூறி உடனடியாக எரிபொருள் நிரப்புவதை நிறுத்தக் கோரியது. ராஜீவ் - சந்திரசேகர் சந்திப்பை அடுத்து, வி.பி.சிங் அரசுதான் எரிபொருள் நிரப்பும் ஒப்பந்தம் போட்டு துரோகம் செய்துவிட்டதாக தாக்குதல் முனையைத் திசை திருப்பியது.

வி.பி.சிங்கும், அவரது வெளிவிவகார அமைச்சர் குஜ்ராலும் வன்மையாக மறுத்தும் ராஜீவ் கும்பல் தொடர்ந்து சவால் விட்டது. ராஜீவ் ஆட்சிக் காலத்திலேயே (1987) போட்ட ஒப்பந்தப்படிதான் எரிபொருள் நிரப்பப்படுகிறதென அமெரிக்க அதிகாரிகள் பேட்டியளித்தனர். தமக்கெதிராக அவதூறு செய்ததற்காக ராஜீவிடம் ஜனதாதள தலைவர்கள் மன்னிப்பு கோரினர்.

இதற்கிடையே எரிபொருள் நிரப்புவதை நிறுத்திவிடும்படி பாரதீய ஜனதா, காங்கிரசு, ஜனதா தளம், போலிக் கம்யூனிஸ்டுகள் ஆகிய பல பெரிய கட்சிகளும் கோரின. காங்கிரசு ஆர்ப்பாட்டங்கள் கூட நடத்தியது.

பம்பாய் சகார் விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் அமெரிக்க போர் விமானம்






படிப்பகம்

www.padippakam.com

இந்தச் சமயத்தில் அமெரிக்காவின் எடுபிடியான சவுதி அராபியாவின் தூதுவன் என்கிற முறையில் இந்தியா வந்த சர்வதேச ஆயுத பேரத் தரகன் ஆதனான் கஷோகி ஆளும் கட்சி, காங்கிரசு, பாரதீய ஜனதா தலைவர்களுடன் விருந்துண்டு, எரிபொருள் நிரப்பும் விவகாரத்தை அமுக்கி வைத்துவிடும்படி செய்தான்.

பாபரி மசூதி விவகாரத்தைப் போலவே முஸ்லீம் வோட்டுக்களை வளைத்துப் போடும் நோக்கத்தோடு ஜனதா தளம் தேசிய முன்னணியும் போலிக் கம்யூனிஸ்டுகளும் இந்த விவகாரத்தைப் பிடித்துக் கொள்ள முயல்கின்றனர். இதுவரை அமெரிக்கா - ஈராக் இரண்டின் ஆக்கிரமிப்பையும் எதிர்த்து நடுநிலை வகிப்பது போல பேசி வந்த வி.பி.சிங் இப்போது ஈராக் - பாலஸ்தீன ஆதரவு நாடகமாடுகிறார்.

ராஜீவ், வி.பி.சிங், சந்திரசேகர் ஆகியோரில் யாருடைய ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவுடனான இந்த இராணுவ ஏற்பாடு கையொப்பமானது என்கிற கேள்வி இன்னமும் நீடிக்கிறது. அதேசமயம் இதற்கு ஒப்பந்தம் எதுவும் தேவையில்லை; நிர்வாக உத்திரவின் மூலம்தான் நடக்கிறது; மனிதாபிமான அடிப்படையில்தான் இராணுவ வசதிகள் அனுமதிக்கப்படுகின்றன என்று சந்திரசேகர் திடலடியாக சாதிக்கிறார்.

மனிதாபிமான அடிப்படையிலான 'சரக்குகள்' தான் அந்த விமானங்களில் போகின்றன என்பதற்கு என்ன ஆதாரம்? அவை சோதனையிடப்படுகின்றனவா? எரிபொருள் விநியோகக் கட்டுப்பாடு அந்த விமானங்களுக்கு மட்டும் மீறப்படுகிறதே என்ற கேள்விகளை அவர் மதிக்கவே இல்லை. இந்த விவகாரத்தை வைத்து சந்திரசேகர் அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்வதாக மிரட்டிய ஆறு சுயேச்சை எம்.பி.க்களையும், விவகாரத்தை முக்கியப் பிரச்சினை ஆக்கிய காங்கிரசையும் அடக்கி விட்டார்.

கூடவே, ''இது சம்பந்தமான ஒப்பந்த இரகசியங்களை வெளியிட்டால் எல்லோருக்குமே அவை பாதகமாக இருக்கும்'' என்று மிரட்டுகிறார். இதன்மூலமும், சர்வ கட்சி கூட்டம் மூலமும் விவகாரத்தை அமுக்கிவிட முயலுகிறார்.

ஈராக்குக்கு எதிராகப் போர் தொடுப்பது உட்பட ஐ.நா பாதுகாப்புக் குழுவின் 12 தீர்மானங்களை ஆதரித்து ஓட்டளித்துள்ள இந்திய அரசு, அமெரிக்காவின் படையெடுப்பிற்கு உதவுவதில் தவறில்லையெனப் பத்திரிக்கைகள் எழுதுகின்றன. 3300 கோடி ரூபாய் ஐ.எம்.எஃப் கடனை எதிர்பார்த்துள்ள இந்தியாவுக்குப் போடப்பட்டுள்ள நிபந்தனை இதுவென்றும் கூறப்படுகிறது.

எப்படியோ, இலைமறைவு காய்மறைவாகச் செய்து கொண்டிருந்த ஏகாதிபத்திய அடிவருடித் தனத்தை இப்போது பகிரங்கமாகவே செய்யத் துணிந்துவிட்டது, இந்திய அரசு. ஈழ விடுதலைப் போராளிகள் இங்கே தஞ்சம் புகவே கூடாது; தேசத்துக்கு ஆபத்து என்று அவதூறு கிளப்பி அடக்கி ஒடுக்கும் இந்திய அரசு, இந்திய நாட்டையே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புப் போருக்கு, பின்புலமாக்கிவிட்டது. ●

# ''திருவாளர் பரிசுத்தம்'' போய் ''திருவாளர் ஒழுக்கக்கேடு'' ஆட்சியில்...

**சந்திரசேகர் கும்பலைப் பொறுத்தவரை எவ்வளவு குறுகிய காலம் ஆட்சியில் இருந்தாலும் இந்திய அரசியலில் அதன் சிறப்பான முத்திரையைப் பதித்துவிட்டுத்தான் போகும். இந்திய அரசியலில் புதிய மரபுகளையும், திருப்புமுனையையும் ஏற்படுத்தி விட்டுத்தான் போகும்.**

ஆதனான் கஷோகி. இவரைப் பற்றி அநேகமாக எல்லா வாசகர்களுக்கும் ஓரளவு தெரியும். இருந்தாலும் இப்போது உலகைக் குலுக்கும் வளைகுடாப் போரில் இந்தியாவின் சார்பாக சமாதானத் தூதுவராகப் பொறுப்பேற்றிருக்கிறார். இந்தியாவைக் குலுக்கும் பாபரி மசூதி - ராம ஜென்ம பூமி விவகாரத்தைத் தீர்த்து வைக்கும் கடமையை மேற்கொண்டிருக்கிறார்; இந்தியாவை வாட்டும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அரபு எண்ணெய் மூலதனத்தைக் கொண்டு வந்து கொட்டுவதாக வாக்களித்திருக்கிறார். ஆகவே இந்தப் பெரும் புள்ளியைப் பற்றி மீண்டும் விவரமாகச் சொல்ல வேண்டியுள்ளது.

ஆதனான் கஷோகியைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இவர் ஒரு சர்வதேச மாமா. உலகின் மிகப் பெரும் முதலாளிகள், இரகசிய உலகப் பேர்வழிகள், பெரும்பாலான உலக நாடுகளின் அரசுத் தலைவர்கள், பாசிச - இராணுவத் தளபதிகள், மதத் தவைர்கள், அரசர்கள் போன்ற சர்வதேசப் பிரமுகர்களுக்குச் சகல வழிகளிலும் ''மாமா'' வேலை செய்பவர்.

ஆதனான் கஷோகியின் தாய்நாடு சவுதி அரேபியா. அதன் அரசருக்கு இவரது தந்தை மருத்துவராகவும் ஆலோசகராகவும் இருந்தார். எகிப்துக்கும், பிறகு அமெரிக்காவுக்கும் படிக்கப்போன ஆதனான் கஷோகி, அதெல்லாம் சரிப்பட்டு வராது; தரகுத் தொழில்தான் உலகிலேயே மிக அதிகமான, மிக விரைவான லாபம் சேர்க்கும் தொழில் என்று கண்டுகொண்டு அதிலேயே இறங்கினார்.

ஆதனான் கஷோகி இன்று பல லட்சம் கோடி டாலர் சொத்துக்களுக்கு அதிபதி. நியூயார்க், லண்டன், பாரிஸ் போன்ற உல்லாசபுரிகளில் பல அடுக்குமாடிகள். ஸ்பெயின், மத்திய அமெரிக்கா, அமெரிக்காவில் பல பண்ணைகள். அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இரண்டு கண்டங்களின் பல ஆலைகளில் பங்குகள். மத்திய தரைக்கடற்கரையில் ஓய்வு மாளிகைகள், உல்லாசக் கப்பல்கள், விமானங்கள், படகுக்கார்கள் இத்தனைக்கும் சொந்தக்காரர்.

ஆதனான் கஷோகி இவ்வளவையும் எப்படிப் பெற்றார்? சுயமுயற்சி - சுய பயிற்சியின் மூலம் தரகுத் தொழிலை ஒரு பெரும் கலையாகக் கற்று வளர்ந்தார். ஆம்பத்தில் 'ஷா' மன்னனின் ஆட்சியில் இருந்த ஈரானுக்கும் அரபு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளில் இருந்து ஆயுதங்களை வாங்கி விற்கும் தரகு வேலையைத் துவங்கினார். பிறகு பல துறைகளுக்கும் தனது தரகு வேலையை விரிவு படுத்தினார்.

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் அரசுத் தலைவர்கள், பாசிச, இராணுவத் தலைவர்களுக்கும் உலக ஆயுதத் தயாரிப்பு ஏகபோக முதலாளிகளுக்கும் இடையே பேரங்கள் நடத்துவது, உலகப் பெரு வங்கிகள் மூலம் கடன்கள் ஏற்பாடு செய்வது; ஆயுத விற்பனை தடைசெய்யப்பட்ட நாடுகளுக்கே கூட ஆயுதக் கடத்தல் செய்வது; தொழில் நுட்ப இரகசியங்களைத் திருடி விற்பது; இவற்றின் மூலம் கொள்ளையடிக்கும் கள்ள - கறுப்புப் பணத்தை உலக இரகிசய வங்கிகளில் பதுக்கி வைப்பது. இரகசியமாக சொத்துக்கள் - ஆலைகளில் பங்குகள் வாங்குவது போன்றவைகளில் உலகப் பிரமுகர்களுக்கு தரகு வேலை பார்ப்பது என்று விரிவு படுத்தினார் ஆதனான் கஷோகி.

ஆதனான் கஷோகி தனது தரகு வேலைகளில் உலகப் பிரமுகர்களை வளைத்துப் போடுவதற்கு சில முக்கியமான 'ஆயுதங்களை' பயன்படுத்துவதில் வல்லவர். அவர்களை ஆடம்பர களிவெறியாட்ட விருந்து விபச்சாரத்தில் மூழ்கடிப்பது; அவற்றையும் இரகசிய பேரங்களையும் பதிவு செய்து வைத்துக் கொண்டு மிரட்டிப் பணிய வைப்பது. உலகப் பிரமுகர்களின் அரசியல் இரகசியங்களையும், இரகசிய உலக வாழ்க்கையையும் உளவு பார்த்து



படிப்பகம்

www.padippakam.com

வைத்துக் கொண்டு மிரட்டிக் காரியங்களைச் சாதிப்பது.

லண்டன் - ஹரூட் பல பொருள் அங்காடி விற்பனை ஆதனான் கஷோகியின் தரகுத் தில்லுமுல்லுகளையும், பாமிலா விவகாரம் அவரது விபச்சாரம் - களிவெறியாட்ட விருந்துகளையும், ஈரான் - காண்ட்ரா - அமெரிக்க ஆயுதக் கடத்தல் இரகசியங்களையும், மார்க்கோஸ் - இமெல்டா விவகாரம் சர்வதேச கள்ள - கறுப்புப் பணக்கடத்தல் இரகசியங்களையும் அம்பலப்படுத்தியது.

ஆதனான் கஷோகியின் இந்தச் சர்வதேசத் தில்லுமுல்லு - மாமா வேலைகளில் அவரது கூட்டாளிகளாக உள்ளவர்கள் இந்தியாவின் பிரபல போலிச் சாமியார் சந்திரா சாமி மற்றும் ''மாமாஜி'' எனப்படும் அகர்வால். இந்தியாவில் சந்திரசேகர், சுப்பிரமணிய சுவாமி, தேவிலால், ராஜீவ் காந்தி முதல் சென்னை அப்போலா மருத்துவமனை பிரதாப ரெட்டிவரை பல பிரபலப் பெரும்புள்ளிகளும் ஆதனான் கஷோகி - சந்திரா சாமி கும்பலின் ''சிஷ்ய கோடிகள்''

எதிர்த்தரப்பில் இருந்தவரை வி.பி.சிங்குக்கு எதிராக லஞ்ச - ஊழல் புகார் கூறி போலி ஆவணங்கள் தயாரிப்பதிலிருந்து, அவரது ஆட்சியைக் கவிழ்த்து, சந்திரசேகர் - ராஜீவ் கூட்டை உருவாக்கி தற்போதைய அரசை நிறுவியது வரை சாதித்த சூத்திரதாரிகளில் முக்கியமானது ஆதனான் கஷோகி - சந்திராசாமி கும்பல்.

எனவேதான் நன்றிக்கடன் மறவாது ஆட்சிக்கு வந்ததும் சந்திராசாமி மீதான வழக்குகளை முடக்கி வைத்துவிட்டு அவரை ''அரசகுரு'' வாக்கிவிட்டார் சந்திரசேகர். இப்போது ஆதனான் கஷோகியைத் தனது அரசின் ''சர்வதேசப் பிரதிநிதி''யாக்கிவிட்டார்.

இதைக் குறிக்கும் வகையில் கடந்த மாதம் 29ந் தேதி புதுடில்லிக்கு கஷோகியின், தனிவிமானத்தில் அவரை வரவழைத்து விருந்துகள் கொடுத்துக் கொண்டாடியது சந்திரசேகர் - ராஜீவ் கூட்டு. இதில் தனிச்சிறப்பு அம்சம் என்னவென்றால் இந்த விருந்துக்கு ஏற்பாடு செய்தவர் டாக்டர் ஜே.கே.ஜெயின் என்ற மார்வாரி. இவர் பாரதீய ஜனதா கட்சியின் நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் எம்.பி. சர்வகட்சிகளுக்கும், குறிப்பாக ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதா - விசுவ இந்து பரிசத்தின் ''ஆடியோ - வீடியோ'' ஒலி - ஒளி பிரச்சார ஏற்பாடு செய்யும் பெரிய முதலாளி.




சந்திரசேகர், ராஜீவ் காந்தி போன்ற தலைவர்களோடு, முக்கிய விருந்தாளிகளாகக் கலந்து கொண்டவர்கள் ஆர்.எஸ்.எஸ். தலைவர் நானாஜி தேஷ்முக் (இவரது ஆசிரமத்துக்கு பெரு நன்கொடை தருவதாக கஷோகி வாக்களித்தாராம்) மற்றும் பாரதீய ஜனதா துணைத் தலைவர் விஜய ராஜே சிந்தியா போன்ற சர்வ கட்சித் தலைவர்கள்.

இந்த விருந்துக்குப் பிறகு ராஜீவே கஷோகியைத் தனது மாளிகைக்கு அழைத்து மறுவிருந்து கொடுத்து கவுரவித்தார். கஷோகியின் விருந்தில் கலந்து கொண்டதற்காக சந்திரசேகரைக் கண்டித்த காங்கிரசுத் தலைவர்கள் ராஜீவும் அதற்குப் போய் வந்ததையும், கஷோகியை வரவழைத்ததையும் கேட்டு வாயடைத்துக் கொண்டனர்.

விருந்து ஏற்பாடு செய்த ஜெயின் கட்சியின் புதிய நிர்வாகக் குழுவில் சேர்க்கப்படவில்லையே தவிர, பாரதீய ஜனதாவே பரப்பிய வதந்திகளின்படி நீக்கப்படவில்லை. ''கஷோகியின் மீது எந்தக் குற்றமும் நிரூபித்து தண்டிக்கப்படவில்லை. புஷ், சதாம், சவுதி அரசர் பாத் ஆகியோரின் நெருங்கிய நண்பரான கஷோகியைக் கொண்டு வளைகுடாப் போரில் சமாதானம் காண இந்தியா முயல்வதற்காக நடந்த ஏற்பாடுதான் இது. இதற்கு முன்பு ஜும்மா மசூதி சாகி இமாம், ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் நானாஜி தேஷ்முக், தேவ்ரஸ் ஆகியோருக்கிடையே கூட இரகசியக் கூட்டம் இப்படி ஏற்பாடு செய்தேன்'' என்றார் ஜெயின்.

ஏற்கனவே பாபரி மசூதி - ராமஜென்ம பூமி விவகாரத்தில் புகுந்து, விசுவ இந்து பரிஷத்தைப் பிளந்து, இந்துச் சாமியார்களின் புது அமைப்பை நிறுவி ராமர்கோவில் கட்டப்போவதான முயற்சியில் ''ராஜகுரு'' சந்திராசாமி ஈடுபட்டுள்ளார். அதற்கு வேண்டியவாறு, அரபு - இசுலாமிய நாடுகளில் உள்ள உலேமாக்கள் - மத குருமார்களிடம் இருந்து மதக்கட்டளைகளைப் பெற்றுத் தருவதாக கஷோகி இந்த விருந்துகளின் போது வாக்குறுதியளித்தார்.

சந்திரசேகர் கும்பலை பொருத்தவரை எவ்வளவு குறுகிய காலம் ஆட்சியில் இருந்தாலும் இந்திய அரசியலில் அதன் சிறப்பான முத்திரையைப் பதித்து விட்டுத்தான் போகும். இந்திய அரசியலில் புதிய மரபுகளையும் திருப்புமுனையையும் ஏற்படுத்தி விட்டுத்தான் போகும். ''திருவாளர் பரிசுத்த''ங்களின் ஆட்சி போய் ''திருவாளர் ஒழுக்கக் கேடு''களின் ஆட்சி வந்து விட்டது. கணவனைக் கொன்றுவிட்டு விதவையோடு குடும்பம் நடத்தும் - ஊர்சுற்றுபவர், தந்தை, மகன், பேரன் ஆகிய கொலைகாரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ஃபோர்ஜரி (போலி ஆவணப்) பேர்வழிகள், கட்சி மாறிகள் மந்திரிகளாக இருப்பதில் தவறில்லை என்றாகி விட்டது. இப்போது ஆதனான் கஷோகி - சந்திரா சாமி போன்ற ''சர்வதேச மாமா''க்கள் இந்திய நாட்டின் சர்வதேசிய, தேசியக் கொள்கைகளை வகுத்து அமுலாக்கும் பிரதிநிதிகளாகி விட்டனர். ●



மகன் ஃபிமருடன் ராஜீவ் வீட்டிற்கு வந்திறங்கும் கஷோகி



படிப்பகம்

www.padippakam.com

# கொட்டடிக் கொலைகளும் 'கோர்ட்டு'களின் தலையீடும்

போலீசின் அதிகார மீறலைப் பற்றி தற்போது நீதித்துறையின் முன் வந்த விபரங்கள் அதையொட்டி நடந்த விசாரணையில் தமிழக போலீசு மற்றும் நீதி மன்றத்தின் யோக்கியதைகள் தோலுரிந்து தொங்கின!

சென்னை திருவல்லிக்கேணி ராயப் பேட்டை பகுதி கள்ளச்சாராய முன்னாள் வியாபாரி மணிமாறன் தி.மு.க. கோஷ்டியால் சிறையில் தள்ளப்பட்டார். அவருடைய ஆட்கள் என்று முரளி, ரவி, ஏழுமலை ஆகியோரை ஜனவரி 4 ஆம் தேதி போலீசு கைது செய்தது. அதன் பிறகு அவர்களைப் பற்றி எந்த விபரமும் தெரியவில்லை.

முரளியின் தாயார் பத்மாவதி; முதல்வர், கமிஷனர், உள்துறை செயலர் என்று அனைவருக்கும் தந்தி அனுப்பினார். 10ந் தேதி வரை எந்த விபரமும் தெரியாமல் போகவே, சென்னை உயர்நீதி மன்றத்தில் 'ஹேபியஸ் கார்ப்பஸ்' மனு தாக்கல் செய்தார். 11ந் தேதி அம்மனுவை விசாரித்த நீதிபதிகள் மிஸ்ராவும் கோவிந்தசாமியும் சம்மந்தப்பட்ட மூவரையும் 18ஆம் தேதிக்குள் கோர்ட்டில் ஒப்படைக்க வேண்டும் என்று போலீசுக்கு உத்திரவிட்டனர். ஆனால், 18ந் தேதி உயர்நீதிமன்ற வழக்குப் பட்டியலில் மனு 'தற்செயலாக' இடம் பெறவில்லை! அடுத்து 19, 20 சனி, ஞாயிறு ஆகிய நாட்கள் கோர்ட் விடுமுறை! போலீசு தந்திரமாக ஒரு வேலை செய்தது. ஒப்படைக்க வேண்டிய மூவரையும் 19ந் தேதி 'லீவு கோர்ட்டில்' ஆஜர்படுத்தி அவர்கள் மீது புதிதாக ஒரு கொலை முயற்சி குற்றத்தை சுமத்தியது. அதன் பேரில் விசாரணை கைதியாக அம்மூவரையும் மத்திய சிறையில் தள்ளியது.

'கோர்ட்' உத்தரவின் பேரில் ஜனவரி 22ந் தேதி சென்னை நகர போலீசு கமிஷனர் ராஜசேகரன் நாயர் விசாரணைக்கு வந்தார். போலீசு தரப்பில் வழக்கு விபரங்கள் ஆவணங்கள் தயார் செய்ய அன்று மதியம் வரை நேரம் கோரி பெற்றுக் கொண்டனர். உடனே, அதையே அஸ்திவாரமாகப் பயன்படுத்தி மதியம் தன்னால் கோர்ட்டில் இருக்க இயலாது. சட்டசபை நடந்து கொண்டிருப்பதால், அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு போக வேண்டும் என்று கமிஷனர் சொன்னார். போலீசு தங்களுக்கு 'தண்ணி' காட்டுவதை கண்டு எரிச்சலடைந்தனர் நீதிபதிகள். ''சட்டசபை போலவே நீதிமன்றமும் ரொம்ப முக்கியமானதுதான். விசாரணை முடியும்வரை இங்கு கட்டாயம் இருக்க வேண்டும்'' என்று உத்திரவு போட்டனர்.

மதியம் விசாரணையின் போது, கமிஷனர் அம்மூவரையும் 19ந் தேதிதான் கைது செய்ததாக புளுகினார். நீதிபதி மிஸ்ரா, ''இதை என்னை நம்ப சொல்கிறீர்களா?'' என்றார். ''கைது செய்த தேதியைப் பற்றி உண்மை தெரிவிக்கப் படவில்லை என்றால் மாநிலம் முழுக்க போலீசு செயல்பாட்டைப் பற்றி விசாரிக்க கமிஷன் நியமிக்க வேண்டி வரும்... மக்கள் ஊழியர்களான நாம் மக்களை மதிக்க வேண்டும். இல்லையானால், அவர்கள் நம்மை மதிக்க மாட்டார்கள்... போலீசு சட்ட விரோதமாக கைது செய்து துன்புறுத்துவதாக இவ்வாறான பல வழக்குகள் ஏழைகளிடமிருந்து வருகின்றன. பெரிய மனிதர்களை முக்கியமானவர்களை இவ்வாறு போலீசு நடத்தியதாக எந்த வழக்கும் வருவதில்லை'' என்று குற்றம் சாட்டினார். ''உண்மையான தகவல்களை கொடுங்கள்'' என்று கூறி மீண்டும் போலீசுக்கு அவகாசம் கொடுத்தார்.

விசாரணை இப்படி பட்டிமன்றம் போல் தொடர்ந்ததே தவிர இவ்வழக்கின் குற்றவாளிகளை தண்டிப்பதிலிருந்து நீதிபதிகள் நழுவி கொண்டனர். விசாரணையை பிப்ரவரி 11ந் தேதி தள்ளி வைத்தனர். கைது செய்த மூவரையும் நிபந்தனையின் பேரில் விடுதலை செய்தனர். மேலும், சென்ற ஆண்டு அக்டோபரிலிருந்து இவ்வாண்டு ஜனவரி வரை கைது செய்தவர்களின் விவரங்களை தமிழக போலீசிடம் கேட்டனர். இத்துடன் இவ்வழக்கின் பரபரப்பு ஓய்ந்தது.

○ ○ ○

இதே போல் இன்னொரு வழக்கு! சென்னை - ராயப்பேட்டையைச் சேர்ந்த கீதா என்பவர், பக்கத்தில் உள்ள ஐஸ் ஹவுஸ் போலீசு நிலையத்தில் ஒரு புகார் செய்தார். சமூக சேவகரான தமது கணவரை காணவில்லையென்றும் அவரை எதிர்த்து வந்த பகுதி ரௌடிகள் கடத்தி கொன்று விட்டார்களோ என்று தான் அஞ்சுவதாகவும் கூறினார்.

ஆனால், போலீசோ, 'புகாரில் இதையெல்லாம் சொல்ல வேண்டாம். என் கணவனைக் காணவில்லை என்று மட்டும் எழுதிக் கொடு' என்றனர். மனு கொடுத்து பல நாட்களுக்குப் பிறகும் போலீசு நடவடிக்கை எடுக்கவில்லை. கமிஷனர் ராஜசேகர் நாயரை அணுகியும் பலன் இல்லை. உயர்நீதி மன்றத்தில் அவர் வழக்கு தொடுத்தார். அதே கோவிந்தசாமியும் மிஸ்ராவும் தான் இதை விசாரித்தார்கள். ''சம்பந்தப் பட்டவர்கள் (போலீசு அதிகாரிகள்) தங்கள் கடமையைச் செய்ய தவறி விட்டார்கள்'' என்றனர். ''சம்பந்தப்பட்ட ரௌடிகளை உடனே கைது செய்ய வேண்டும்.. பொறுப்புள்ள(!) போலீசு அதிகாரியை நியமித்து... புலனாய்வின் விவரங்களைப் பற்றி நீதிமன்றத்துக்கு அறிக்கை தரவேண்டும்'' என்றனர்.

இதன் நடுவில், போலீசு கமிஷனர் ராஜசேகரன் நாயரை விசாரணைக்காக உயர்நீதி மன்றத்திற்கு அழைத்ததே போலீசை அவமானப்படுத்தும் செயல் என்று ஆர்ப்பாட்டம் செய்தனர், போலீசு அதிகாரிகள்.

ஜனவரி 25ந் தேதி பகல் சென்னை - மெரீனா கடற்கரை, காந்தி சிலை அருகே 50-க்கும் மேற்பட்ட 'இன்ஸ்பெக்டர்கள் ஊர்வலமாக, டி.ஜி.பி. அலுவலகத்துக்கு கோஷம் எழுப்பிக் கொண்டு சென்றனர். டி.ஜி.பி. துரை, கூடுதல் டி.ஜி.பி. ராஜ்மோகன் இருவரிடமும் நீதிபதிகளுக்கு எதிராக மனு கொடுத்தனர். திரும்பவும் காந்திசிலை அருகே கூடி நீதிபதி மிஸ்ராவை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றினர்.

போலீசு கமிஷனரை நீதிபதி மிஸ்ரா மோசமான முறையில் நடத்தினார். தன் நிலையை விளக்க கமிஷனருக்கு நீதிபதி தரவே இல்லை. போலீசு கமிஷனர், 'மிஸ்டர்' என்ற மரியாதை வார்த்தை கூட உபயோகப் படுத்தவில்லை. நாற்காலி போட்டு உட்காரச் சொல்லவில்லை. 'நீங்கள் வி.ஐ.பி.க்களுக்கு மட்டும் அதிகாரி அல்ல' என்று தகாத(!) வார்த்தைகளால் பேசினார். 'உங்கள் கீழுள்ள அதிகாரிகளைக் கட்டுப்படுத்தாத நிலையில் நீங்கள் என்ன கமிஷனர்?' என்று மரியாதைக் குறைவாக பேசினார்

**போலீசு என்றாலே வரைமுறையற்ற அதிகாரம். ஏராளமான 'கிம்பளம்' (லஞ்சம்) என்ற தேனடையைக் காட்டித்தான் அரசு போலீசுக்கு ஆட்களை சேர்க்கிறது. அதிகார, ஆடம்பர மோகத்தில் வீழ்ந்து கிடக்கும் வேலையற்ற இளைஞர்களும் இவ்வேலைக்கு ஈ போல் வந்து மொய்க்கிறார்கள். இவ்வாறு, எந்த சமூக அக்கறையும், பொறுப்பும் இல்லாத பெரும் பட்டாளம் மக்கள் ஊழியனாகவும் சமூக பாதுகாவலனாகவும் தியாகத்துடன் பணியாற்றும் என்பது எவ்வளவு பெரிய ஏமாற்று!**

பத்மாவதி



முரளி



இப்ராஹிம்





படிப்பகம்

www.padippakam.com

**நீதிமன்றத்தின் அநீதிகளையும், போலீசு துறையின் கொட்டடிக் கொலைகள், சித்திரவதை, கைதுகளையும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் எழுதாத முதலாளித்துவ பத்திரிக்கைகள் இல்லை! விமர்சிக்காத ஓட்டுக்கட்சிகள் இல்லை! இருந்தாலும் அவற்றின் புனிதத்தை இவை இரண்டும்தான் கைக்கோர்த்துக் கொண்டு காக்கின்றன!**

என்று போலீசு மரியாதை திலகங்களாக கோபப்பட்டது.

ஆனால், இவர்கள் பணியை விட்டு வந்து காக்கி உடையுடன் ஆர்ப்பாட்டம் செய்யவும், கண்டன ஊர்வலத்திற்கு அரசு வாகனங்களை பயன்படுத்தவும் இவர்களை முதலில் அனுமதித்து யார் என்பது இன்னமும் ரகசியமாக இருக்கிறது. அனுமதி பெறாமல் கண்டன ஊர்வலம் நடத்தியதற்கு சட்டப்படி இவர்களை சிறையில் தள்ள வேண்டும்! இருந்தும் இவர்களுடைய மனுவை நேசத்துடன் பெற்றுக் கொண்டனர், உயர் போலீசு அதிகாரிகள்.

இவர்களின் முறைகேடான ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் போகவே உயர்நீதிமன்ற வக்கீல்கள் ஒன்றுகூடி போலீசுக்கு எதிராக போராட்டத்தில் இறங்கினர். ஜனவரி 30-ந் தேதி 200-க்கும் மேற்பட்ட வக்கீல்கள் உயர் நீதி மன்றத்தில் இருந்து தலைமைச் செயலகத்திற்கு ஊர்வலமாகச் சென்றனர். 'ரிசர்வ் பேங்க்' சுரங்கப்பாதை அருகிலேயே அவர்களை போலீசு தடுத்துவிட்டது. முன்னோடிகள் சிலர் சென்று கருணாநிதியிடம் மனு கொடுத்தனர். ''காவல் துறையே, நீதித்துறையை மதித்து நட'' ''நீதித் துறையைக் காப்போம்(!)'', ''போலீசு அராஜகம் ஒழிக'' என்று கோஷங்கள் எழுப்பினர்.

கறுப்பு அங்கி அணிந்துள்ள இந்த நீதியின் காவலர்கள், உழைக்கும் மக்கள் போலீசால் ஓராயிரம் முறை அவமானப்பட்ட போது கௌரவமாக ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தவர்கள்! இப்போது அநாதையாக நின்று கொண்டு போலீசு அராஜகத்தைப் பற்றி புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

''மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தான் போலீசு கமிஷனரை நீதிபதி மிஸ்ரா கடிந்து கொண்டார்'' என்றனர். இந்த குறிப்பிட்ட வழக்கில் நீதிபதிகள் மிஸ்ராவும் கோவிந்தசாமியும் ''நியாயமாக'' நடந்து கொண்டார்கள் என்பது முற்றிலும் உண்மைதான்! ஆனால் இந்த ''நேர்மையான'' விசாரணையின் மூலம் விடுவிக்கப்பட்ட ''கைதி''களுக்கு பலன் பூஜ்யம்தான்; முறைகேடாக அவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்தும் நிபந்தனை அடிப்படையிலும், 1000 ரூபாய் பிணைத் தொகை வசூலித்து, அதன்பிறகு அம்மூவரையும் 'விடுதலை' செய்யலாம் என்றுதான் நீதியை நிலைநாட்டினர்.

ஆக, போலீசால் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டவர்களிடமும் நீதிமன்றம் சட்டப்பூர்வமாக கப்பம் வசூலிக்கும் உயர் உரிமை படைத்தது என்ற நரித்தனமான நீதிதான் நிலைநாட்டப்பட்டது.

○ ○ ○

நீதிமன்றத்தின் அநீதிகளையும், போலீசு துறையின் கொட்டடிக் கொலைகள், சித்திரவதை, கைதுகளையும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் எழுதாத முதலாளித்துவ பத்திரிக்கைகள் இல்லை! விமர்சிக்காத ஓட்டுக்கட்சிகள் இல்லை! இருந்தாலும் அவற்றின் புனிதத்தை இவை இரண்டும்தான் கைக்கோர்த்துக் கொண்டு காக்கின்றன! அவற்றில் விளையும் தீமைகள் அனைத்திற்கும் அவற்றில் பொறுப்பு வகிக்கும் மோசமான சில தனிநபர்கள்தான் காரணம் என்கின்றன. இவற்றையும் மீறி அந்நிறுவனங்களில் நீதியும் நேர்மையும் கிடைக்கிறதென்றால் அது தான் மகத்துவம் என்று பூரித்துப் போகின்றன.

ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்தாலும் பரவாயில்லை. தவறியும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படுவது கூடாது; சகிக்க முடியாது என்கின்றனர், இதே நீதிமான்கள்தான் இன்னொரு இலக்கணத்தையும் வகுத்து அளித்துள்ளார்கள்! குற்றங்களை வெளிக் கொணர்வதற்கும் குற்றவாளிகளை சம்மதிக்க வைப்பதற்கும் நான்காம் தரமான சித்திரவதைகளைக் கூட - மிருகவதை - கையாள்வது தவறில்லை என்கிறார்கள்.

'ஆசை காட்டியோ, பயமுறுத்தியோ, சித்திரவதை செய்தோ கைதியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவே கூடாது' என்கிறது குற்றவியல் சட்டம். 'மயிலே, மயிலேன்னா இறகு போடுமா...? சட்டத்தை அப்படியே பின்பற்றி மென்மையா ஒரு குற்றவாளியை விசாரிச்சா உண்மை வெளிவருமா? யதார்த்தமா யோசிங்க... போலீசு பிடிச்சா உள்ள தள்ளுவாங்க; செமத்தியா உதை கிடைக்குங்கற பயம் இருக்கும் போதே குற்றம் இவ்வளவு பெருத்து போச்சு' என்று போலீசு 'நியாயம்' சொல்கிறது.

சென்ற ஆண்டின் முதல் 6 மாதத்தில் மேலோட்டமான ஒரு புள்ளி விவரத்தின்படி தமிழகத்தில லாக்-அப் சாவுகள் 15!

● மதுரை 'திடீர்நகர்' போலீசு நிலையத்தில் 30-9.90 அன்று 18 வயது இப்ராஹீம் போலீசால் அடித்து கொல்லப்பட்டான். இவனுடைய நண்பன் சாகுல் அமீது என்பவனை நகை திருட்டில் சம்மந்தப் பட்டிருக்கிறான் (பின்னால் அதுவும் பொய் என்று நிரூபணமானது) என்று இப்ராஹீமை விசாரிக்க அழைத்துச் சென்ற போலீசு பின்னர் பிணமாகக் கொடுத்தது.

● சென்னை - அசோக் நகர் ஆர்-3 போலீசு நிலையத்தில் 19.9.90 அன்று கால் ஊனமுற்ற இளைஞர் கணேசன் என்பவரை போலீசு அடித்துக் கொன்றது. நடு இரவில் ஆட்டோவில் சென்ற பெண்களை மடக்கி தகாத முறையில் நடந்துக் கொண்ட கும்பலில் கணேசனும் ஒருவன் என்றது, போலீசு. நெஞ்சுவலியால் இறந்து விட்டான் என்று கூறியது.

● சென்னை - சாந்தோம் அருகே, நம்பிக்கை நகரில் கள்ளச்சாராய மாமூல் வாங்க சென்ற போலீசை பலபேர் மத்தியில் கிண்டல் செய்ததாக ராஜா என்ற நபர் கைது செய்யப்பட்டார். மறுநாளே பொய் வழக்கில் இழுத்துச் சென்று மைலாப்பூர் போலீசு



போலீசு ஊர்வலம்; நீதிமன்றத்திற்கு எச்சரிக்கை



படிப்பகம்

www.padippakam.com



வக்கீல்கள் ஊர்வலம்: நீதியின் மீது திடீர் நேசம்!

நிலையத்தில் (14.10.90) வைத்து அடித்துக் கொன்றது, போலீசு.

● தூத்துக்குடி - ஏரல் கிராமத்தில் சென்ற ஆண்டு ஜூலை மாதத்தில், வீரபாகு என்ற இளைஞரை ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே தாறுமாறாக அடித்து நிர்வாணமாக்கியது, போலீசு. வெறும் கோவணத்துடன், தெருக்களில் ஊர்வலமாக கும்பல் கூடி அடித்து மறுநாள் பிணமாக ஒப்படைத்தது.

● ராமேஸ்வரம் - பாம்பன் கிராமம். சத்துணவு வேலை பார்க்கும் தாமஸ் மேரி என்ற கணவனால் கைவிடப்பட்ட அபலையை மெய்யம்புலி பஸ் நிறுத்தத்தில் இருந்து மிரட்டி அழைத்து சென்றது, போலீசு. அவளுடைய கணவன் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து நகை திருடி மறைந்து விட்டதாக கூறி பாம்பன் போலீசு நிலையத்தில் அவரை அடைத்தது. பிறகு, மூன்று போலீஸ்காரர்கள், ''என்னை உன் மச்சான் மாதிரி நெனைச்சுக்கோ''ன்னு மிருகங்களாக மாறி அந்த பெண்ணை குற்றுயிராக்கினர்.

இம்மாதிரி ஏராளமான குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட பிறகும் ஒரு போலீசைக் கூட கைது செய்யவில்லை எந்த நீதிபதிகளும். அதுமட்டுமல்ல, அப்போது தமிழகக் காவல் துறை தலைவராக இருந்த டி.ஜி.பி. துரை இப்படி பத்திரிக்கைகளுக்கு பேட்டியளித்தார்.

''சமீபகாலமாக லாக்கப் மரணங்கள் அதிகமாகி விட்டன என்பது பற்றி சரியான தகவல் இல்லை. அதை நான் ஒப்புக் கொள்ள முடியாது.... கிரிமினல் ஒருவனை, ஒரு திருட்டு கேஸில் நாங்கள் பிடித்து 'திருடிய பொருட்களை எங்கே வைத்திருக்கிறீர்கள் என்று உளமாறச் சொல்லுங்கள்' என்று கேட்டால் என்ன பதில் வரும்? திருட்டுக் கொடுத்தவர்கள் எங்களைப் பற்றி என்ன சொல்லுவார்கள்...?.(31.10.90 - ஜூ.வி.)'' என்று போலீசின் கொட்டடிக் கொலைகள், சித்திரவதைகள் சரிதான் என்றார்.

போலீசின் ரத்தவெறியை நியாயப்படுத்திய வன்முறையை தூண்டும் அவரது பேச்சை அரசும் நீதிமன்றமும் தடுக்கவும் இல்லை; தண்டிக்கவும் இல்லை! வி.ஆர்.லட்சுமி நாராயணன் போன்ற முன்னாள் அதி உயர் போலீசு 'அதிகாரிகள் அப்போது அதை நியாயப்படுத்தினர்.

இவ்வாறான போலீசு கொட்டடி கொலைகள், சித்திரவதைகள், போலீசின் பாலியல் வன்முறைகள் அதை நியாயப்படுத்தும் போலீசு அதிகாரிகளும், இவையெல்லாம் பலமுறை நிரூபிக்கப் பட்ட பிறகும் போலீசுக்கு தண்டனை வழங்க மறுக்கும் நீதிமன்றங்களும் - இவைதான் இன்றைய சிவில் சமுதாயத்தின் அதி உயர்ந்த அதிகார பீடங்கள்! இந்திய குடிமக்கள் அனைவரும் இவற்றிடம் தலைகுனிந்து யாசகம் பெற்றுத்தான் தாங்கள் வாழும் உரிமையை பெற வேண்டும்! மாறாக, அவற்றின் எந்தவொரு நடவடிக்கைகளையும் விமர்சிப்பதோ, எதிர்ப்பதோ தாங்களே மரணகுழியை வெட்டிக் கொள்வதற்கு சமமாகும். இதைத்தான் திரும்ப திரும்ப போலீசு, தனது முரட்டு கரங்கள் மூலமும் வரைமுறையற்ற அதிகாரங்கள் மூலமும் நிரூபிக்கின்றன.



இறந்துபோன சிறுவன் கணேசன் ஸ்கூட்டர் மெக்கானிக் ஷெட்டில் வேலைசெஞ்சு என்னைக் காப்பாத்திக்கிட்டிருந்தான்.

ㅇ ㅇ ㅇ

நீதிமன்றத்தின் கனத்த கதவுகளைத் தட்டி நியாயம் கேட்கும் இந்திய குடிமகன்களுக்கே கிடைக்கும் பலன் இதுதான் என்றால் அன்றாடம் காய்ச்சிகளான பெரும்பான்மையான ஏழை மக்கள் போலீசிடமிருந்து மீண்டுவருவது கனவிலும் நடக்க முடியாத செயலாகி விட்டது.

போலீசு என்றாலே வரைமுறையற்ற அதிகாரம், ஏராளமான 'கிம்பளம்' (லஞ்சம்) என்ற தேனடையைக் காட்டித்தான் அரசு போலீசுக்கு ஆட்களை சேர்க்கிறது. அதிகார, ஆடம்பர மோகத்தில் வீழ்ந்து கிடக்கும் வேலையற்ற இளைஞர்களும் இவ்வேலைக்கு ஈ போல் வந்து மொய்க்கிறார்கள். இவ்வாறு, எந்த சமூக அக்கறையும், பொறுப்பும் இல்லாத பெரும் பட்டாளம் மக்கள் ஊழியனாகவும் சமூக பாதுகாவலனாகவும் தியாகத்துடன் பணியாற்றும் என்பது எவ்வளவு பெரிய ஏமாற்று!

எனவே தான் அவர்கள் போலீசைக் கண்டாலே பீதியுடன் விலகி ஓடுகிறார்கள்.

இதைத் தான் அம்மக்களை அடக்கிச் சுரண்டும் ஆளும் கும்பல்களும் அரசு எந்திரமும் எதிர்ப்பார்க்கின்றன. அதற்காக அரசு பயங்கரத்தை, போலீசு ராஜ்யத்தை மறைமுகமாக அங்கீகரிக்கின்றன. தேவைப்பட்டால் பகிரங்கமாகவும் பிரகடனப் படுத்துகின்றன. நாள்தோறும் அரங்கேறும் போலீசு அக்கிரமங்கள் அவற்றின் ஒரு பகுதிதான்! இதை கண்டிப்பதாகவும், எதிர்ப்பதாகவும் நீதிமன்றம் அவ்வப்போது வீரம் பேசுவதெல்லாம் போலீசுக்கு எதிராக விழித்தெழும் மக்களை நிரந்தர மயக்கத்தில் ஆழ்த்துவதற்குத்தான்!

● குணசேகரன்.



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

வளைகுடா போரைத் தொடர்ந்து, சிக்கனத்தைக் கடை பிடிக்குமாறும் அரசு விழாக்களில் ஊதாரித்தனத்தை நிறுத்துமாறும் பிரதமர் சந்திரசேகர் உபதேசித்துள்ளார். ஆனால், கடந்த ஜனவரி இறுதியில் பாட்னாவில் நடந்த அவரது நண்பர் மகளது ஆடம்பரத் திருமணத்திற்கு விமானத்தில் பறந்து சென்று அவர் கலந்து கொண்டார். அதன் பிறகு அவரது பல்லியா தொகுதிக்கு நல்வாழ்வுத் திட்டங்களை அறிவிக்க விமானத்தில் பறந்து சென்றார். அப்போது அவருக்கு 'கோல் இந்தியா' என்ற அரசுத் துறை நிறுவனம் ஆடம்பர விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. அந்த விருந்து வேண்டாமென்று தனது கூட்டாளியும் பீகார் நிலக்கரிச் சுரங்க மாஃபியா தலைவனுமான சூர்யதேவ் சிங் அளித்த விருந்தில் அவர் கலந்து கொண்டார். ஜனவரி மாத கடைசி வாரத்தில் மட்டும் அவரது விமானப் பயணம் மற்றும் விருந்து விரயங்களால் பல லட்சக் கணக்கான ரூபாய் பாழாகியுள்ளது. ஆட்சியாளர்களின் உபதேசமெல்லாம் ஊருக்குத்தான்.

பிராந்திய மேலாதிக்க நோக்கத்துடன் பாகிஸ்தானைத் துண்டாடி, வங்க தேசத்தை உருவாக்க 'முக்தி பாஹினி' என்ற விடுதலைப் போராட்ட அமைப்பின் பெயரால் இந்திய ராணுவம் செய்த ரகசிய சதிகளைப் பற்றி, பிரபல முதலாளித்துவ பத்திரிக்கையாளர் குஷ்வந்த்சிங், ''தி வீக்'' எனும் ஆங்கில வார ஏட்டில் சில உண்மைகளை நினைவு கூர்ந்துள்ளார். 1971-ல் வங்க தேசத்தை விடுவிக்கும் திட்டத்துடன் பாகிஸ்தானைப் பற்றி ஆத்திரமூட்டும் வகையில் இந்திய அரசு பிரச்சாரம் செய்தது. உண்மைகளை அறிந்தும்கூட இந்தியப் பத்திரிக்கைகள் நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டன. காஷ்மீரி போராளிகள் என்ற பெயரில் இந்திய உளவு நிறுவன ஏஜெண்டுகள் இந்திய விமானத்தை பாகிஸ்தானுக்குக் கடத்திச் சென்றனர். காஷ்மீரி போராளிகளுக்குப் பாகிஸ்தான் உதவுவதாகக் காட்டி ஆத்திரமூட்டுவதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது.

இதேபோல அன்றைய கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வரும் பாக். மற்றும் பிற நாட்டு சரக்குக் கப்பல்களைத் தாக்குவதையும் இந்தியா ரகசியமாகச் செய்தது. ஒரு பிரிட்டிஷ் சரக்குக் கப்பல் நள்ளிரவில் குண்டுகளால் துளைக்கப்பட்ட நிலையில் பழுது பார்க்க கல்கத்தா துறைமுகத்துக்கு வந்ததை நான் பார்த்தேன். முக்தி பாஹினி எனும் விடுதலை இயக்கத்தினர் எந்திரத் துப்பாக்கிப் படகு மூலம் தாக்கியதாக இந்திய அரசு கதை கட்டியது. ஆனால், அப்போது முக்தி பாஹினியிடம் இத்தகைய படகு ஏதும் கிடையாது. உண்மையில் முக்தி பாஹினி என்ற பெயரில் வங்க தேசத்தில் இந்திய ராணுவத்தினர் ஏற்கனவே ரகசியமாகக் குவிந்திருந்தனர். அவர்களது கைவரிசையே இது — என்று குஷ்வந்த்சிங் குறிப்பிட்டுள்ளார். அன்று காங்கிரசோடு சேர்ந்து கொண்டு போலிக் கம்யூனிஸ்டுகளும் வங்க தேச விடுதலைக்கு இந்தியா உதவியதாக மக்களை ஏய்த்தனர். ஆனால், கம்யூனிசப் புரட்சியாளர்கள் அன்று சரியாக உணர்த்தியதைப் போல, இது இந்திய மேலாதிக்கத்திற்கான ரகசிய சதி என்பது இப்போது மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

''ராம்போ'' என்றாலே வீரம்; பயம் என்பது மருந்துக்குக் கூட கிடையாது -இவையெல்லாம் திரைப்படத்தில்தான்! ஆனால், நிஜ வாழ்க்கை வேறானது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெளியுறவுக் கொள்கையைப் பிரதிபலிக்கும் ராம்போ எனும் வீரக் கதாநாயகனாக நடிக்கும் சில்வஸ்டர் ஸ்டெலோன் அண்மையில் தனது ஐரோப்பிய பயணத்தை ரத்து செய்துவிட்டார். பயங்கரவாதிகள் தாக்கக்கூடும் என்ற செய்தியைக் கேட்டு அவர் நடுநடுங்கிப் போனதே இதற்குக் காரணம். ராம்போவின் வீரத்தைப் பார்த்து பிறக்கும் குழந்தைகளுக்கு அப்பெயரைச் சூட்டிப் பல பெற்றோர்கள் அகமகிழ்ந்தனர். ஆனால், ராம்போ என்றால் மாபெரும் கோழை என்று இப்போது அம்பலப்பட்டு, அவமானகரமான பெயராகிவிட்டது.



பஞ்சாபில் பத்திரிக்கைகளின் பாடு இப்போது திண்டாட்டமாகி விட்டது. ஒருபுறம், சீக்கிய தீவிரவாதிகள் தமது அறிவிப்புகளை பத்திரிக்கைகளில் வெளியிடக் கோருகின்றனர். மறுபுறம் அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ள ஆட்சியாளர்கள் அவற்றை வெளியிடக் கூடாதென மிரட்டுகின்றனர். கடந்த ஜனவரி 18ந் தேதியன்று, ''பஞ்சாபிலுள்ள அனைத்து கல்வி நிறுவனங்களிலும் பஞ்சாபிதான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும்; உடனடியாக இதைச் செயல்படுத்தாவிட்டால் விளைவுகளை சந்திக்க நேரிடும்'' என்று சீக்கிய தீவிரவாதிகள் விடுத்துள்ள அறிவிப்பை டைம்ஸ் ஆஃப் இந்தியா, அஜீத் ஆகிய பத்திரிக்கைகள் வெளியிட்டன. ஆத்திரமடைந்த ஆட்சியாளர்கள் இப்பத்திரிக்கைகள் மீது பயங்கரவாத சட்டம், ஆட்சிக் கவிழ்ப்பு சதி, வகுப்புவாத வெறியூட்டியது முதலான குற்றங்களைச் சுமத்தி வழக்கு தொடுத்துள்ளனர். அதே நாளில் எக்ஸ்பிரஸ், டிரிப்யூன், ஜனசத்தா ஆகிய பத்திரிக்கை அலுவலகங்களில் ''ரெய்டு'' நடத்தி இச் செய்தி வரக்கூடாதென மிரட்டியுள்ளனர். பஞ்சாப் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து தீர்க்கப் போவதாகக் கூறும் சந்திரசேகர் அரசின் லட்சணம் இதுதான்!

வளைகுடாப் போரில் யார் வெற்றி பெறுகிறார்களோ இல்லையோ, ஆயுத வியாபாரிகளும், கடத்தல், வர்த்தக சூதாடிகளும்தான் உண்மையில் கொழுத்த ஆதாயம் அடைந்துள்ளனர். ஸ்வீடனின் போபர்ஸ் மற்றும் நோபல் ஆயுத தளவாட உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியைப் பெருக்கியும், விதிமுறைகளை மீறி ரகசியமாக விற்றும் கொள்ளை லாபத்தை ஈட்டி வருகின்றனர். அதேபோல சூதாட்ட கிரிமினல் பேர்வழிகள் இப்போரை ஒட்டி ரகசிய சூதாட்டங்கள் நடத்திக் கொள்ளையடிக்கின்றனர். தைவான் நாட்டில் இத்தொழில் இன்று கொடிகட்டிப் பறக்கிறது. இன்று அமெரிக்கா, பாக்தாத் மீது குண்டு வீசுமா, வீசாதா என்றும், ஈராக் இன்று இஸ்ரேலைத் தாக்குமா, தாக்காதா என்றும், தினமும் சூதாட்டம் நடக்கிறது. குதிரை ரேஸ் போல, ஒரு ரூபாய் கட்டினால், 500 ரூபாய் பரிசு என்ற முறையில் தைவானில் இந்த சூதாட்டங்கள் நடக்கின்றன. உழைக்கும் மக்களுக்கோ யுத்தம் கொடுமையானதாக இருக்கிறது. போர் வெறியர்களுக்கும் சூதாடிகளுக்கும் கொண்டாட்டமாக இருக்கிறது.

நாகாலாந்து - மணிப்பூர் எல்லையில் உள்ள ஒய்நாம் வட்டாரத்தில், போரா



படிப்பகம்

www.padippakam.com




ளிகளை அழித்தொழிப்பது என்ற பெயரில் அசாம் துப்பாக்கிப்படை 1987 ஆகஸ்ட் மாதத்தில் நடத்திய அட்டூழியங்களைப் பற்றி ''ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்'' என்ற சர்வதேச மனித உரிமைக்கான அமைப்பு அண்மையில் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அசாம் துப்பாக்கிப் படை ஒய்நாம் வட்டாரத்தில் 'மோதல்' என்ற பெயரில் அப்பாவி கிராமவாசிகள் 14 பேரைக் கொன்று, வீடுகளைச் சூறையாடி, விளைநிலங்களைப் பாழாக்கியது. பெண்களையும் சிறுமிகளையும் கற்பழித்தது. ராணுவத்தின் அழுக்குத் துணிகளை துவைக்குமாறும், சமையல் மற்றும் எடுபிடி வேலைகளைச் செய்யுமாறும் அப்பகுதி மக்களுக்குத் தண்டனை விதித்தது. இதைப் பற்றி பத்திரிக்கைகள் அரைகுறையாக செய்தி வெளியிடத் தொடங்கியதும், இப்படையின் தளபதி இப்பகுதிவாழ் மக்களைப் பிடித்து வந்து நிர்பந்தமாக புன்முறுவலுடன் ராணுவத்தைப் பாராட்டி பேட்டியளிக்கச் சொன்னார். எந்த தாக்குதலும் நடக்கவில்லை என்று சித்திரவதை செய்து அறிக்கை வெளியிடச் செய்தார்.

இக் கொடுமைகளை எதிர்த்து மனித உரிமைக்கான நாகா மக்களின் இயக்கம் (NPMHR) என்ற அமைப்பினர் வழக்கு தொடுத்தனர். ஆனால், இந்த வழக்கு சிவில் கோர்ட்டில் அல்லாமல் ராணுவ கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. அசாம் துப்பாக்கிப் படையை எதிர்ப்போர் அனைவரும் பிரிவினைவாத நாகா போராளிகளின் ஆதரவாளர்கள் என்று ராணுவம் குற்றம் சாட்டியது. விசாரணையின் தீர்ப்பையும் வெளியிட மறுத்துவிட்டது. சிறப்பு அதிகாரச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு இன்னமும் ராணுவம் தொடர்ந்து அட்டூழியம் செய்து வருகிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ''சர்வதேச மனித உரிமைக்கழகத்தின் அறிக்கைகள் பொய்யானவை; அவர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தால் உதைப்போம்'' என்று முன்பு பஞ்சாப் - காஷ்மீர் பற்றி மனித உரிமைக் கழக அறிக்கை வெளியானபோது கொக்கரித்தார் பாசிச ராஜீவ். அவரது பினாமி சந்திரசேகர் அரசு இந்த அறிக்கையை மதிக்கவா செய்யும்?

பெற்ற மகனை விற்ற அன்னை -இது தமிழ் சினிமா அல்ல. அண்மையில் நடந்த உண்மைச் சம்பவம். மத்திய பிரதேசத்தின் காரியபந்த் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ஏழைத்தாய் வறுமை காரணமாக தனது இளங்குழந்தையை நூறு ரூபாய்க்கு விற்றுள்ளார். காச நோயால் அவதிப்படும் இந்தத் தாய் தனது குழந்தைக்கு இந்த நோய் தொற்றிக் கொள்ளக்கூடாது என்று விற்று விட்டதாக அரசு கதை கட்டுகிறது. ஆனால், வறுமை காரணமாகத்தான் குந்தையை விற்றதாக உள்ளூர் மக்கள் கூறுகின்றனர். இதில் கொடுமை என்ன என்றால், உள்ளூர் போலீசுக்காரர் ஒருவர் இந்த குழந்தை விற்பனைக்கு இடைத்தரகராகச் செயல்பட்டுள்ளார்.

ஆட்சிகள் மாறினாலும் இந்தியாவில் அன்னியக் கூட்டுகள் மட்டும் குறைவதே இல்லை. விலைவாசியைப் போல ஆண்டு தோறும் அன்னிய ஏகாதிபத்தியங்களுடன் கூட்டு தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போகிறது. கடந்த ஆண்டில் 605 புதிய கூட்டுத் தொழில்களுக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. இவ்வாண்டு துவக்கத்தில் அது 10% உயர்ந்து 666 ஆக அதிகரித்துள்ளது. இதில் ஜெர்மனி முதலிடத்திலும் அதைத் தொடர்ந்து அமெரிக்காவும் பிரிட்டனும் உள்ளன. ஆனால், முதலீட்டைப் பொருத்தவரை அமெரிக்காவே முதலிடத்தில் உள்ளது. அன்னியக் கூட்டு தொடர்ந்து அதிகரித்து, இந்தியப் பொருளாதாரத்தில் அதன் இரும்புப் பிடி வலுப்பட்டபோதிலும் இந்தியாவை இன்னமும் சுதந்திரநாடு என்று ஆட்சியாளர்களும் போலிக் கம்யூனிஸ்டுகளும் ஏய்த்து வருகின்றனர்.

கருப்புப் பணத்தை ஒழிக்க முடியாமல் அரசு கையைப் பிசைந்து கொண்டிருக்கும்போது இந்திய தலைமை நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா ஓர் அதிசய அறிவிப்பைச் செய்துள்ளார். 'வருமான வரி ஏய்ப்பாளர்கள், கருப்புப் பண பேர்வழிகளிடம் கடுமையாக நடந்து கொள்ள வேண்டாம்; அவர்களை ஆக்கப் பூர்வமான துறைகளில் முதலீடு செய்யுமாறு ஏற்பாடு செய்யலாம்'' என்று அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளார். இனி கருப்புப் பண பேர்வழிகளுக்கு மட்டுமல்ல, கள்ளச் சாராய - கிரிமினல் பேர்வழிகளுக்கும் கொண்டாட்டம்தான். ஏனெனில், இம்



மாதிரி ஆலோசனை சொல்லும் நீதிபதி, 'கள்ளச்சாராயமும் விபச்சாரமும் பெருகிவிட்டது; அதை ஒழிக்க முடியாது; எனவே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டாம்'' என்று நாளை ஆலோசனை கூறமாட்டாரா என்ன?



புரட்சிகர கலைஞர் தோழர் கத்தா. நாக்பூரில் நுழையக் கூடாதென்று அம்மா வட்டக் கலெக்டர் ஜி.ஆர்.பெட்ஜ் கடந்த ஜனவரி 14ந் தேதியன்று தடை விதித்துள்ளார். அவரது கலை நிகழ்ச்சி வன்முறையைத் தூண்டுகின்றன என்று குற்றம் சாட்டி இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதற்குமுன் பம்பாயில் ஜனவரி 5ந் தேதியன்று அவர் நடத்திய புரட்சிகர கலை நிகழ்ச்சியின்போது எந்த வன்முறையும் நடக்கவில்லை. அதேபோல, இதே நாக்பூரில் நான்காண்டுகளுக்கு முன்பு அவர் நிகழ்ச்சி நடத்தியபோதும் அதன் பின்னரும் வன்முறை நடந்ததற்கான தடயமே இல்லை. நாக்பூரில் புரட்சித் தீ பற்றிக் கொள்ளுமோ என்ற பீதியில் பாரதீய ஜனதா அரசு இந்த அநீதியான நடவடிக்கையை எடுத்துள்ளது. மக்களின் விருப்பத்துக்கும் சிவில் உரிமைக்கும் எதிராகவும் கருத்துச் சுதந்திரத்துக்கு கல்லறை கட்டும் வகையிலும் இந்த உத்திரவு அமைந்துள்ளது என்று அறிவு ஜீவிகள், பத்திரிக்கையாளர்கள், மருத்துவர், நீதித்துறையினர், அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் உள்ளிட்ட 33 அமைப்புகளின் பிரதிநிதிகள் கண்டனம் தெரிவித்து தடையை நீக்கக் கோரி இயக்கம் நடத்தி வருகின்றனர். ஆட்சியாளர்கள் கத்தாரின் கலைநிகழ்ச்சிக்குத் தடை விதிக்கலாம். ஆனால், அவர் மூட்டிய புரட்சிக் கனலை மக்களின் மனங்களிலிருந்து அழித்து விட முடியுமா, என்ன?

அதிசயம்! ஆனால், உண்மை. பம்பாயில் 1957ம் ஆண்டு போடப்பட்ட ஒரு வழக்கு 33 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் விசாரணைக்கு வந்துள்ளது. இடைப்பட்ட காலத்தில் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 16 சாட்சிகள் இறந்து விட்டனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் கையாடல் செய்த தாக கூறப்படும் தொகையைவிட 130 மடங்கு அதிகமான தொகை இவ்வழக்கில் விரயமாகியுள்ளது. போபர்ஸ் கொள்ளையர்களின் வழக்கு என்றால் அடுத்த நாளே விசாரித்து குற்றவாளிகளைத் தப்புவிக்கும்; சாதாரண வழக்கு என்றால் 33 ஆண்டுகளாகும். இதுதான் இந்திய நீதித் துறையின் யோக்கியதை!



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு வரதட்சணை கொலை

மேட்டுக்குடி கும்பலால் உருவாக்கப்பட்ட 5 நட்சத்திர கலாச்சார மோகமும் ஆடம்பரப் பொருள் மோகமும் வரதட்சணைக் கொடுமையாக பரிணமித்து நடுத்தர மற்றும் உழைப்பாளி வீட்டுப் பெண்களை பலி கொள்வது தொடர்கிறது. இதோ பெண்கள் ஆண்டு கொண்டாடப்பட்ட மூன்றே நாட்களுக்குள் திருத்தணியில் ஒரு வரதட்சணைக் கொலை!

திருத்தணி தோட்டக்கார மடத்தெருவில் வசிக்கும் சலவைத் தொழிலாளியான வீரபத்திரன் தனது தங்கை குமாரியை தனது உறவினரான சஞ்சீவிக்கு கடந்த ஆண்டு மணம் முடித்துக் கொடுத்தார். 8 மாதம் வரை குமாரி கணவன் வீட்டாருடன் சந்தோசமாக வாழ்ந்தார். அதன்பிறகு மாமியார் (குப்பம்மாள்), மாமனார் (வேணு), கணவன் ஆகியோர் வரதடசணை கேட்டு கொடுமைப்படுத்தவே அடிக்கடி அண்ணன் வீட்டிற்கு வந்து முறையிட்டிருக்கிறார் குமாரி.

3.1.91 அன்று தங்கை, கணவன் வீட்டார் கொடுமை தாங்க முடியாமல் எங்கேயோ ஓடிபோய் விட்டாள் என்ற செய்தி வரவே அலறியடித்துக் கொண்டு ஆர்.கே. பேட்டை அயனேரிக்கு (சஞ்சீவி குடும்பமுள்ள ஊர்) ஓடினார் வீரபத்திரன். அன்றும் மறுநாளும் சுற்றுவட்டாரமெங்கும் தேடியும் உறவினர்கள் வீட்டில் தேடியும் குமாரியை காணவில்லை. சஞ்சீவி குடும்பத்தார் கொலை செய்து மறைத்திருப்பார்களோ என்ற சந்தேகத்தில் சுற்றுவட்டார கிணறுகளில் தேடிப்பார்த்தார் வீரபத்திரன். அவரது சந்தேகம் ஊர்ஜிதமானது. சஞ்சீவி வீட்டு பின்புறம் உள்ள கிணற்றில் தங்கை பிணமாக கிடந்ததை பார்த்தவர் கதறியழுதார். ஊர்க்காரரான துரைசாமி மற்றும் ஊர்மக்களும் சேர்ந்து குமாரியின் பிணத்தை வெளியே எடுத்தனர். ஆனால் அதற்குள் குமாரியின் மாமனார் 5 பேருடன் வந்து வீரபத்திரனை குண்டுகட்டாகத் தூக்கிக் கொண்டு போய் ஒரு வீட்டிற்குள் பூட்டி வைத்தனர். பின்னர், உறவினர் யாருக்கும் சேதி சொல்லாமல் பிணத்தை எரித்த பிறகே வீரபத்திரனை விடுவித்தனர்.

வெளிவந்த வீரபத்திரன் ஆர்.கே. பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். 5.1.90 அன்று திருவள்ளூர் கோட்டாட்சி தலைவர், பள்ளிப்பட்டு தாலுகா தாசில்தார், மற்றும் வருவாய்த் துறை ஆய்வாளர் உட்பட பல அதிகாரிகள் அயனேரிக்கு வந்து குமாரியின் சாம்பலைத் தான் பார்வையிட்டனரே ஒழிய, முறையாக விசாரணை எதுவும் நடத்தவில்லை; உண்மையை கண்டுபிடிக்கவும் முயலவில்லை; குற்றவாளிகளை தண்டிக்க முற்படவுமில்லை. சஞ்சீவி குடும்பத்தினர் இன்றுவரை கைதுகூட செய்யப்படவில்லை.

# 'மார்க்சிஸ்டு' தலைவரின் மண்டை கனம்

'நாயோடு படுத்தவன் உன்னியோடு தான் எழுந்திருப்பான்' என்ற பழமொழிக்கிணங்க பாராளுமன்ற - சட்டமன்ற சகதிக்குள் வீழ்ந்த போலிக் கம்யூனிஸ்டுகள் அதன் ஒரு அங்கமாகவே மாறி வெளிவந்தார்கள். இப்போது பொறுக்கி அரசியலின் அனைத்து குணாம்சங்களையும் பெற்றுத் திகழ்கிறார்கள். 'மார்க்சிஸ்டு' கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. மற்றும் நெல்லிக்குப்பம் நகரமன்றத் தலைவரான சி.கோவிந்தராசன் இதற்கு மேலும் ஒரு ஆதாரமாக இருக்கிறார்.

ஒவ்வொரு நூலகத்திற்கும் இலவசமாக இடமளித்து சொந்த செலவில் கட்டிடம் கட்டத் தரவேண்டியது நம்மிடம் நூலக வரி வசூலிக்கும் அரசின் கடமை. அரசு நூலகத்




துறை சில இடங்களில் இவற்றை நடைமுறைப்படுத்தியிருப்பினும் பல ஊர்களில் நூலகங்கள் வாடகை கட்டிடத்திலேயே இயங்குகின்றன; எண்ணற்ற கிராமங்களில் நூலகமே இல்லை. நெல்லிக்குப்பத்தில் உள்ள கிளை நூலகமானது வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதற்கு சொந்த இடம், கட்டிடம் வேண்டி பல்வேறு அமைப்புகள் 1986 முதலே நகராட்சிக்கு மனு கொடுத்தும் எவ்வித பயனுமில்லை. சம்புலிங்கம் பூங்கா, குதிரைவண்டி நிறுத்தம் (புகைவண்டி நிலையம் அருகில்), காந்தி பூங்கா எதிரில் உள்ள இடம், திரௌபதி அம்மன் திடலுக்கு எதிரேயுள்ள இடம்... என பல இடங்கள் இருந்தும், இடமில்லை யென நகராட்சி சாக்கு கூறிவருகிறது. எனவே நூலக வாசகர் வட்டத்தினரும், தமிழின இளைஞர் குழுவினரும் 19.12.90 அன்று நகராட்சியைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்தனர்.

மறுநாள் நெல்லிக்குப்பத்தில் நடைபெற்ற 'மார்க்சிஸ்டு' கட்சிப் பொதுக்கூட்டத்தில் பேசிய நகர மன்றத் தலைவர் கோவிந்தராசன். உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டவர்களை ரௌடி பாணியில் மிரட்டிப் பேசினார். இதைக் கண்டித்தும் நகரின் பிரச்சினைகளைக் குறித்து நகராட்சியை அம்பலப்படுத்தியும் பகுதி இளைஞர் குழுவினர் சுவரொட்டி ஒட்டினர். மேலும் இப்பிரச்சினைகள் குறித்து பேசுவதற்காக 6.1.91 மற்றும் 7.1.91 ஆகிய தேதிகளில் நகர்மன்றத் தலைவரை நேரில் சந்தித்தனர். இவர்களிடம் கோவிந்தராசன் பேசியவற்றிலிருந்து சில...

''நகராட்சி மருத்துவமனை நாறுவது இப்பொழுதுதான் உங்களுக்கு தெரியுதா? போஸ்டராடா ஒட்டுறீங்க போஸ்டர்? நூலகத்திற்கு இடம் கேட்க நீங்க யாருடா? உங்களை யாரு தூண்டி விடறது? உங்க அரசியல் பின்னணி என்னன்னு எனக்குத் தெரியும். நான் உங்களை எப்படி பார்க்கணுமோ அப்படி பார்க்கிறேன். படையா திரட்றீங்க படை? நான் இன்று (7.1.91) வடலூர் மீட்டிங்குக்குப் போறேன்; அங்க உங்கப் படையிருந்தா சொல்லுங்க; மோதி பார்ப்போம்''

இப்படி வேஷ்டி வரிந்து கட்டிக் கொண்டு வில்லன் பேச்சு பேசிய கோவிந்தராசனை அம்பலப்படுத்தி இளைஞர் குழுவினர் பிரசுரம் வெளியிட்டனர். மேலும் நகருக்கு பேருந்து நிலையம் அமைப்பேன் என்பது உட்பட கோவிந்தராசன் கொடுத்த வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படாததையும் அம்பலப்படுத்தினர். நகர மக்களின் பிரச்சினைகளுக்கு அடாவடித்தனமாக பதில் சொன்னதோடு கட்சி சாயம் பூச முயன்ற கோவிந்தராசனின் போலி வேடத்தை தோலுரித்து தாங்கள் எந்த கட்சியையும் சாராதவர்கள் என்று விளக்கி பிரச்சாரம் செய்தனர். அம்பலப்பட்டுப்போன கோவிந்தராசன், இளைஞர் குழுவிலிருந்து தான் யாரையும் சந்திக்கவில்லை என்றும் நகரப் பிரச்சினை தொடர்பாக எதுவும் பேசவில்லை என்றும் இப்போது புளுகி வருகிறார்.

'மார்க்சிஸ்டு'களின் இளைஞர் பிரிவு (DYFI) பிற பகுதிகளில் மக்கள் பிரச்சினைகளுக்காக போராடுவதை அவர்களே தினம் தோறும் தமது பத்திரிகைகளில் பட்டியலிடுகிறார்கள். ஆனால் தாம் பதவியிலுள்ள பகுதிகளில் - தொகுதிகளில் அதேவகை பிரச்சினைகளுக்காகப் போராடுபவர்களை பாய்ந்து குதறுகிறார்கள். இதுதான் 'மார்க்சிஸ்டு'களின் உண்மை சொரூபம்!

தகவல்: தமிழின இளைஞர் குழு, நெல்லிக்குப்பம்.



படிப்பகம்

www.padippakam.com

## மாயனூர் 'டான்செம்' நிறுவனம்

# எதற்கெடுத்தாலும் காண்ட்ராக்ட்!

மாயனூரில் அமைந்திருக்கும் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் பைப்ஸ் நிறுவனம் (TANCEM - டான்செம்), அதிகாரிகளின் ஊழலுக்கும் தொழிலாளர்கள் மீதான அடக்குமுறைக்கும் பெயர் பெற்று விளங்குகிறது. நிர்வாகத்தை சரிவர இயக்காமல் அதிகாரிகள் ஊழலில் திளைக்க உடந்தையாக இருந்துவிட்டு கம்பெனி நஷ்டத்தில் ஓடுவதாக புலம்பியது அரசு. இதையே காரணமாக காட்டி கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் போடவேண்டிய சம்பள உயர்வு ஒப்பந்தத்தை தள்ளிப் போட்டது; டிசம்பர் '91க்குள் ஒப்பந்தம் முடித்து தருவதாக கூறியது. ஆனால் 2 முறை கம்பெனியை லே-ஆஃப் விடுவதாக தேதி குறித்து மிரட்டியதை தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை.

இன்று 8 கோடி ரூபாய் வரை புதிய 'ஆர்டர்கள்' வந்துள்ளதாகவும் கம்பெனி லாபத்தில் இயங்குவதாகவும் தானே ஒத்துக் கொண்டும் சம்பள உயர்வு ஒப்பந்தம் போட மறுக்கிறது, நிர்வாகம். தொழிற்சங்கங்கள் அனைத்தும் சேர்ந்து மனுகொடுத்தும் நிர்வாகம் அலட்சியப்படுத்தியே வருகிறது. அதே சமயம் தொழிலாளர்கள் மீதான அடக்குமுறையும் சுரண்டலும் அதிகாரிகளின் ஊழலும் முறைகேடுகளும் எள்ளளவும் குறையவில்லை; தொடர்கிறது; உதாரணத்திற்கு சில...

- ஆலையின் 3 வேலைகளுக்கு மட்டுமே காண்டிராக்ட் விட்டிருந்த நிர்வாகம் இன்று 11 சிறுசிறு வேலைகளுக்கும் காண்டிராக்ட் விட்டு அதிகாரிகளும் தனியார்களும் கொள்ளையடிக்க வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது. குழாயை 'பினிஷிங்' செய்ய, 'சிமிண்ட் பிட்டிங்' செய்ய, வேஸ்ட் குழாய்களை உடைக்க - வண்டியில் ஏற்ற - வெளியே கொண்டுபோய் கொட்ட, குழாய்களை தண்ணீர் அடிக்கும் இடத்திற்கு எடுத்துச் சென்று அடுக்க, ஆலையை சுத்தம் செய்ய, தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச... இப்படி ஆலையில் நடைபெறும் ஒவ்வொரு அசைவிற்கும் காண்டிராக்ட் விடப்பட்டுள்ளது. நிரந்தர ஊழியர்கள் அல்லாமல் தொழிலாளர்களை தினக்கூலிகளாக்கி கேள்வி கேட்பாரற்றவர்களாக்கியிருக்கிறது, நிர்வாகம்.

15 ரூ. முதல் 25 ரூ. வரை அரசாங்கம் நிர்ணயித்த கூலியைக் கொடுக்காமல் 10 ரூ. முதல் 13 ரூ. வரை கொடுத்துவிட்டு மீதியை ஆலை நிர்வாகத்திலுள்ள 18 அதிகாரிகளும் காண்டிராக்ட்காரனும் சுருட்டுகிறார்கள்.

- 1987ம் ஆண்டு முதல் ஆலையின் முக்கிய இயந்திரமான 'ஹைட்ராலிக் பிரஷர் பம்பு' பழுதடைந்திருந்தது. அப்போதே உடனடியாகப் புதிய இயந்திரத்தை வாங்கியிருந்தால் அனைத்து செலவும் சேர்த்து 5 அல்லது 6 லட்சம் ரூபாய்க்குள் அடக்கியிருக்க முடியும். ஆனால் இதை விடுத்து பழைய இயந்திரத்தையே சரிசெய்கிறோம் என்று கூறி கோயம்புத்தூர், பம்பாய் என்றெல்லாம் அலைந்து லட்சக்கணக்கான ரூபாய்களில் பாதியை வீணாக செலவழித்து, பாதியை சுருட்டிக் கொண்டார்கள், அதிகாரிகள். கடைசியாக இயந்திரம் சரிபடுத்த முடியாமல் போகவே 1990 நவம்பர் மாதம் புதிய இயந்திரம் வாங்கி அடக்கவிலை 13 லட்சம் என்று கணக்கு காட்டினார்கள்.

- ஆலையிலிருந்து 'பைப் வேஸ்டுகளை' எடுத்துச் சென்று மலைப்பட்டியில் 7 ஆண்டுகளாக கொட்டி வருகிறது நிர்வாகம். இந்த 'பைப் வேஸ்டுகளை' மீண்டும் குழாயாகவோ தகடாகவோ மாற்ற முடியும் என்பது தெரிந்தும் அலட்சியப்படுத்தியே வருகிறது. இதற்குரிய இயந்திரம் வாங்கும்படி சென்ற வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது தொழிலாளர்கள் கோரிக்கையாக வைத்து வலியுறுத்தியும் இன்றுவரை நடைமுறைப்படுத்தவில்லை.

சந்தா, அன்பளிப்பு, நன்கொடை வசூலிக்கவும் தேர்தலின்போது ஓட்டுப் பொறுக்கவுமே ஓடிவருகின்றன ஓட்டுக்கட்சி தொழிற்சங்கங்கள். தாங்கள் எதிர்கட்சியாக உள்ளபோது போராட முன்வரும் இவர்கள் ஆளுங்கட்சியாக இருக்கும்பொழுது கருங்காலி வேலை செய்யவும் தயங்குவதில்லை. தொழிலாளர்கள் அமைப்பாக திரண்டுவிடக் கூடாது என்பதற்காகவே காண்டிராக்ட் முறையை - தினக்கூலி முறையை தொழிலாளர்களை ஒடுக்குவதற்குரிய ஒரு கருவியாக பயன்படுத்தி வருகிறது நிர்வாகம். எந்நேரத்திலும் காண்டிராக்ட் தொழிலாளர்களை வெளியேற்றும் நிலையில் வைத்து மிரட்டுகிறது நிர்வாகம். இக்கொடிய முறைக்கு எதிராக எந்த தொழிற்சங்கமும் வாயே திறப்பதில்லை. எனவே 'டான்செம்' தொழிலாளர்கள் இன்னும் இத்தொழிற்சங்கங்களையே நம்பி மோசம் போகாமல் மாற்றான ஒரு புரட்சிகர தொழிற்சங்கத்தை உருவாக்க முனைய வேண்டும். அதுவே சிறிய பிரச்சினைகளில் கூட நிர்வாகத்தின் சதிகளை முறியடித்து தொழிலாளர்களின் நலனை நிலைநாட்ட வழிகோலும்.

— தகவல்: பு.ஜ. வாசகர் வட்டம், மாயனூர்.




# ஓர் அபலையின் குரல்

போலீசும் அதிகார வர்க்கமும் சாதாரண மக்களின் அன்றாட வாழ்வை கடித்துக் குதறி சின்னாபின்னப் படுத்துகின்றன. இதற்கு மேலும் ஒரு சான்றாக இருக்கும் என்பதால் எங்களுக்கு வந்த இக்கடிதத்தை உங்கள் பார்வையில் வைக்கிறோம்.

மரியாதைக்குரிய ஐயா,

என் குடும்பத்தினருக்கும், பக்கத்து வீட்டார் பவுல் (ஓய்வு பெற்ற போலீசு) குடும்பத்தினருக்கும் நடைபாதை குறித்தும், கழிவுநீர் செல்லுதல் குறித்தும் பிரச்சினை ஏற்பட்டது. பவுலுடைய மகன்கள் (ராஜா, குமார்) இருவரும் போலீசு இலாக்காவைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால் என் குடும்பத்தினர்மீது நடத்தும் தாக்குதலுக்கு அளவே இல்லை. என் வீட்டு ஓட்டுக்கூரையின் மீது கல்லால் எறிவது, அவர்கள் வீட்டு மாடியில் இருந்து கொண்டு மதுபாட்டில்களை வீசுவது, கண்டபடி திட்டுவது... என தொல்லை கொடுத்து வருகின்றனர். இது குறித்து திருவில்லிப்புத்தூர் டவுன் போலீசு நிலையத்தில் புகார் செய்தோம். எங்கள் புகார் மனுமீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால், எங்கள் மீது போலீசார் போலி வழக்கு தொடுத்து விட்டனர். பின்னர் இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நேரடி புகார் மனு செய்தோம். அதன்பேரில் விசாரணை நடந்தது. திருவில்லிப் புத்தூர் டவுன் போலீசு இன்ஸ்பெக்டர் நடத்திய விசாரணையில் தகுந்த சாட்சியங்களோடு நடந்ததை நிருபித்தோம். இதுவரை பவுல் குடும்பத்தின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மீண்டும் பவுல் குடும்பத்தினர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நீ எப்படி புகார் செய்யலாம் என்றும் நாங்கள் போலீசு இலாக்காவைச் சேர்ந்தவர்கள்; எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்று கூறியும் தொல்லை கொடுத்து வருகின்றனர். டி.பி. நோயாளியான எனது கணவரை பவுல் மகன் குமார் கண்டபடி திட்டி அடித்து விட்டார். இதற்குப் பின்னும் இருமுறை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எங்களுக்கு பாதுகாப்புக் கோரி மனு கொடுத்தோம். எவ்வித நடவடிக்கையும் இல்லை. இப்போது போலீசு துறையின் நேரடித் தாக்குதலில் சிக்கிக் கொண்டு இருக்கிறோம். எங்களுக்கு உதவும்படி தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
சமாதானம்.
க/பெ.சூ.மிக்கேல்
36,சந்தைப் பேட்டைத் தெரு,
திருவில்லிப்புத்தூர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: செ.மதியழகன், 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

ஒன்று நடிப்பு, ஒன்று உண்மை என்பது இந்தச் சினிமாக்காரியின் சிரிப்பிலும், செயலிலுமே தெரிகிறது. ஒட்டுப் பொறுக்க வரும்போது ஏழைத் தாய்மாரைக் கட்டிப்பிடித்து, கவர்ச்சிச் சிரிப்பு உதிர்த்து, கரிசனை காட்டுவதுபோல நடிப்பது - இது சினிமாக்காரி ஜெயலலிதா! காரியம் செய்துதர வேண்டுமானால் அந்த எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான ரசிகரையும் காலிலே விழவைக்கும் வக்கிரம் - அது பாசிச, பிழைப்புவாத, பொறுக்கி அரசியலின் கதாநாயகி ஜெயலலிதா!

''எம்.ஜி.ஆரின் உண்மையான வாரிசு, தமிழ்நாட்டின் நம்பிக்கை நட்சத்திரம் - ஜெயலலிதா'' என்று பார்ப்பனப் பத்திரிக்கைகள் இப்போது ஜெயலலிதா ''லாலி'' பாடுகின்றன. எம்.ஜி.ஆரைப் போலவே கூட்டத்தைக் கூட்டி, ஓட்டு வாங்கி, ஆட்சியைப் பிடித்துவிடும் கவர்ச்சி ஜெயலலிதாவுக்கும் உண்டு; எம்.ஜி.ஆரைப் போலவே கட்சிக்காரர்களைக் காலில் விழவைக்கும் திறமை ஜெயலலிதாவுக்கும் உண்டு; இதுதான் அந்தப் பத்திரிக்கைகள் கூறும் காரணங்கள்.

ஆனால் ஜெயலலிதாவுக்கு இன்னும் சில திறமைகள் உண்டு. மந்திரி, எம்.எல்.ஏ. எம்.பி. வேட்டாளர் சீட்டு முதல் மாவட்ட, வட்ட, வார்டு கட்சிப் பதவிவரை ஏலத்தில் விட்டுக் கொள்ளையடிப்பதில் வல்லவர். கூட்டுக் கட்சிகளுடன் இடப்பங்கீடு - ஆதரவுக்கே கூட விலைவைத்துப் பேரம்பேசி வசூல் செய்வதிலும் வல்லவர். கொள்கை, லட்சியம் என்கிற மேல்பூச்சுக்கூட இல்லாமல் அரசியலை மொத்த வியாபாரம் ஆக்குவதில் முன்னோடியாக விளங்குகிறார். இந்த வகையில் நாடாளுமன்ற - சட்டமன்ற அரசியலுக்கே நம்பிக்கை நட்சத்திரமாக உள்ளார். இதையே ராஜீவ், சந்திரசேகர், தேவிலால், போன்ற ''தேசீய'' அரசியல் தலைவர்களும் பின்பற்ற வைத்து விட்டார்.

இப்படிக் கட்டிப்பிடிப்பதும், காலில் விழுவதும், விலை பேசுவதையுமே அரசியலும், அதற்கான அரசியல் அமைப்பும் நீடிப்பதை இனியும் பொறுப்போமா?



படிப்பகம்